46

உ

கடவுள் துணை

கூடலூர்தாலுக்காசின்னகாரக்காடு

நாராயணசாமியாரா லியற்றிய

26 MAR 1923

அனுசூயகற்பு

நாடகம்.

இவை

மதுரா முத்தாண்டிகுப்பத்திலிருக்கும்

எலிமெண்டெரி ஸ்கூல் உபாத்தியாயர்

சொ, ஜெகநாத படையாச்சியாரிடம்

சகலசுதந்தரத்துடன் பெற்றுக்கொண்டு

மயிலை,

தி. இரத்தினமுதலியார்.

அண்டுபிரதர் அவர்களால்

சென்னை.

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

58987

ரிஜிஸ்டர்ட் காப்பிரைட்.

இதன்விலை அணா 5.

கடவுள் துணை.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பதுயாதெனில்சென்னப்பட்டணம் ஆதியப்பநாய்க்கன்தெருவு 67-வதுநெம்பர்வீட்டிலிருக்கும் மயிலை. தியாகராயமுதலியார் குமாரர் இரத்தினமுதலியார் அண்டுபிரதர் அவர்களால் இந்த அனுசூயகற்புநாடகத்தை யாதாமொருவர் அச்சிடுவார்களாகின் 1867-வது ௵த்து 25-வது ஆக்டின் 20-வது பிரிவில் 6-வது விதியின்படி (ரிஜிஸ்டர்காப்பிரைட்) பெற்றிருக்கிறபடியால் இதை அச்சுக்கூடத்தலைவர்களும் மற்றெவர்களும் அடியில் கண்டிருக்கிற என்னுடைய அநுமதியன்றி அச்சிடப்படாது வேறு பாஷையிலும் மொழிபெயர்த்தும் அச்சிடப்படாது அப்படி சட்டத்திற்கு விரோதமாகச் செய்வார்களாகில் அதனால் நேரிடும் நஷ்டத்தையும் கொடுப்பதன்றி கிரிமினல் கோர்ட்டின்சட்டப்படிக்கி தண்டனைக்குள்ளாவார்கள்.

இப்படிக்கி.

மயிலை தி. இரத்தினமுதலியார்

அண்டுபிரதர்,

நெ. 67. ஆதியப்பநாய்க்கன்தெருவு,

ஆனைகெவுனி சென்னை.

உ

கடவுள் துணை.

அநுசூயகற்புநாடகம்.

கணபதி துதி.

தந்ததோர்கனியைவாங்கி தனிவலமாகவந்த
முந்துமாமறைப்பொருளை முகுந்தனைமனதில்கொண்டு
சிந்தெழுமதியைசூடும் சிவன்மகாவிஷ்ணுமுதல்
விந்தைநாடகத்தைபாட விநாயகர்காப்பதாமே.

பிரமன்கவி.

மூர்த்திகள்தேவர்க்கெல்லாம் முதல்வனாய்கருவமைக்கும்
நேர்த்தியாய்பிரம்மலோகம் நெறிமுறைதவராவண்ணம்
கார்த்துமேஅரசுசெய்து கனமுள்ளசெங்கோலேந்தி
நாற்றிசையோரும்போற்ற நான்முகன்வருகின்றாரே.

பிரமன்-தரு.

பாராருலகமெல்லாம் சீராய்புகழ்படைத்த
பரிவுள்ளபிரமன்நானே திருமூர்த்தியிலொருவர்
பரிவுள்ளபிரமன் நானே

நேராய்திலோர்த்தமை ரம்பையூர்வசியாட
நித்தமும்பாவணர் நின்றுபுகழைபேச
சு-நித்தியவஸ்துவை பத்தியாய்தொழுவேன்
அத்தனிவனென நித்யலோலன் பார

பஞ்சமுகமிலங்க அஞ்சலஞ்சலாய்மாதர்
பரிவாய்சாமரைவிசவே இருபுரமும்
பரிவாய்சாமரை போடவே
வஞ்சமில்லாதமாதர் மங்கைசரஸ்வதியாள்
மலரடிபோற்றியேநித்தியம் துதித்துப்புகழைபேச
சு-வானவர்தேவர்கள் வந்தடிதாழ
நானிலம்புகழ்பெரும் நற்றவசீலன் பாரா

நவரத்தினமுடிமின்ன நாரதர்வீணைமீட்ட
நானிலம்புகழ்ந்தேற்றவே இருபுரமும்
நானிலம்புகழ்ந் தேற்றவே
தவண்டமல்லரிபூரி டங்காய்பேரிகைபாட
சத்ததாளமுடன் வெற்றிகொடிகொண்டாட
கு-சாதனமாகிய ஜீவர்களனைத்தையும்
சதிருடன்சிருஷ்டித் தருள்பவன்நானே பாரா

அன்னவாகனமேரும் அயனெனும்நாமம்பூண்ட
அரியினுந்தியிலுதித்தேன் நான்முகனுன்
அரியினுந்தியி லுதித்தேன்
பன்னுமறைகள்நான்கும் பரிந்துஉணர்ந்தநாதன்
இன்னிலத்தோருக்கு இறைவனுகியலோலன்
சு-இத்தரைமீதினில் கர்த்தனும்நாமென
பத்தியாய்சதுர்முக தேவருமென்ன பாரா

பிரமன்கவி.

சத்தியலோகமெல்லாம் தன்மையாயரசுசெய்து
இத்தரைமீதிலேதான் இன்பமாய்ஜீவர்க்கெல்லாம்
பத்தியாய்கருவமைக்க பரமனாருளினாலே
நித்தமும்துதிக்கவேதா னெரிமுறையசிந்திட்டாரே.

வசனம்.

கேளும் மந்திரிமார்களே சிவன் விஷ்ணு இவர்க ளருளினாலே இந்த சத்தியலோகத்தை அரசுசெய்து வருகிறோம் ஆகையால் இன்றையதினம் சரஸ்வதியாளிடம் சென்று வார்த்தையாடவேண்டும் ஆகையால் சரஸ்வதியம்மனை அழைத்துவாரும் மந்திரி.

சரஸ்வதி-கவி

துதிபெருமயிலைப்போலும் தோகையாளெழுந்திருந்து
சகிரோ ளிவ...ம் தன்ன கஞ்சனார் தனக்குப்பாரி

விதிமுறைதவராவண்ணம் வித்தகிமுதன்மையான
சதுர்பெரும்மாதர்சூழ சரஸ்வதிவருகின்றாளே.

சரஸ்வதி தரு.

சத்தியாயுலகமெங்கும் வித்தைபதமளிக்கும்
சரஸ்வதிமாதுவாரார் உல்லாசமாக
சரஸ்வதி மாதுவாரார்

முத்தாரத்தின மோகனமாலையாட
பத்தியாய்முத்தாரங்கள் பாதசதங்கைகொஞ்ச
சு-பங்கையமீதினில் கங்கணமாட
தங்கசரப்பளி எங்கும்சொலித்திட சத்தி

தாமரைமீதிலுறங்கும் பூமகளானநங்கை
சாமரைஅனேகமாதர் நேமமுடனேபோட
சு-சங்கரிவேணி பம்பரவாணி
மங்கையர்இங்கிர்த நாட்டியமாட சத்தி

சாயல்நடையன்னம்போல் தாயாருலகுக்கெல்லாம்
ஆயாமரைமுடிவில் நேயமாதர்கள்சூழ
சு-அன்புமிகுத்திடும் செம்பொன்பதுமைபோல்
துன்பமழித்திட்ட மங்கையாளான சத்தி

சீருரையுஞ்சிரு காரைநகரில்வாசன்
நேருரையும்வள்ளி தெய்வானை மணவாளன்
சு-நித்தமும்வேலனை பத்தியாய்தொழுதிட
பத்தன்நாராயணன் பாடலைப்பாடிட சத்தி

சரஸ்வதிகொச்சகம்.

வஞ்சமில்லாநாயகரே மலரடிக்கேயான்சரணம்
கொஞ்சும்கிளியதைபோல் கோதையரைநீயழைத்த
றஞ்சிதமாகஓதி நங்கையர்க்குநீயுரையும்
துஞ்சுமுந்தன்திருவடியில் தோகைபரும்போற்றிசெய்தேன்

பிரமன்கொச்சகம்.

மாதரசேமாமதியே மாங்குயிலேசெங்கரும்பே
நீதமுடன்தாமரையில் நீயமர்ந்தவேணியேகேள்
பாதம்பணிந்ததினால் பக்ஷமுடன்வாழ்ந்திருப்பாய்
வேதவிதி தவாராத வித்தகியேவாழிவாழி.

சரஸ்வதி-வேறுதரு.

நாதனேஎனையழைத்த　　நீதமானசேதிகளை
நங்கைஎனக்குரையும்　　பிராணநாதா
வேதாஉன்னீதிகளை　　விண்டிடஎனக்குநன்றாய்
சு-வித்தகரேநீ　　பத்தியாயுரையும்
சித்தமும்களிக்க　　சுத்தமாய்சொல்லும்　நாத

பிரமன்-தரு.

அஞ்சனம்மானம்மாதே　　கொஞ்சியுனையழைத்த
ரஞ்சிதசேதிகேளும்　　பெண்மயிலே
பஞ்சமாயுலகுக்கெல்லாம்　　மிஞ்சியேபடைத்தருளும்
சு-தற்பரன்றனே　　பொற்பணிமானே
அற்புதசேதி　　அரைகுவேன்தானே　அஞ்

சரஸ்வதி-தரு.

காமன்தனக்குமேலே　　நேமமுடனுரைப்பேன்
கருத்தையுரைசெய்குவாய்　　பிராணநாதா
பூமிதனிலேகர்ப்பு　　மாதர்தனக்குமே
சு-போதருமுண்டோ　　நீதரேயுரைப்பீர்
சிதாநன்றாய்　　சேதிகள்தன்னையே　காமன்

பிரமன்-தரு.

மானேஇவ்வுலகத்தில்　　தேனேமும்மூர்த்திகள்
மாதர்தனக்குமேலே　　பெண்ணே
தேனேகர்ப்புடைய　　மாதர்புவியிலில்லை
சு-தெரியவேயுரைத்தேன்　　பரிவதாய்கேளும்
அரி[illegible]ன்பீசன்　　அவர்க்குமேலில்லை　மானே

பிரமன்-வேறுதரு.

செய்யுமுலகத்தில் உய்வன்படைப்புதொழில்
சிருஷ்டிக்கயான்பெரியோன் சரஸ்வதியே

சரஸ்வதி-தரு.

பெரியவனென்றுரைத்தாய் சரியானசிவனுக்கு
எதினாலேமுத்தியுண்டு பிராணநாதா

பிரமன்-தரு.

அன்னநடையுடைய மின்னிடையானமாதே
அகிலவுயிர்க்கும்படி யளப்பவர்தான்

சரஸ்வதி-தரு.

படியளந்தோங்குவதால் பரமர்க்குமுத்திஎன்றீர்
பைய்யரவோர்க்குயென்று முத்தியுண்டு

பிரமன்-தரு.

முத்திவழிகளெல்லாம் சித்தமாய்ஆராய்ந்துரையும்
முரமைதனில்பெரியோன் பெண்மயிலே

சரஸ்வதி-கவி.

மன்னவாமன்னாகேளும் மகிதலந்தன்னிலேதான்
உன்னிதமாகஉண்மை உத்தமிதெரிந்துக்கொண்டேன்
நன்னயமானமாதர்கள் நமக்குமேலுலகிலில்லை
சொன்னதைநம்பிநானும் சுந்தரிமகிழ்ச்சியானேன்

பொதுவசனம்.

இவ்விதமாகத்தானே பிரமனும் சரஸ்வதியும் வார்த்தையாடிக்கொண்டிரானின்ற சமையத்தில் திருலோக சஞ்சாரியாகிய நாரதர் இன்றையதினம் கலகம்செய்ய யாதொன்றுமில்லை என்றிரும்பினால் கடலைசெய்துக்கொண்டு ஈஸ்வரி, சரஸ்வதி, லக்ஷ்மி, இவர்களிடம் கலகம் செய்யும்படியாக நாரதர் சபைக்கு வருகிறவிதங்காண்க.

நாரதர்-கவி.

மூர்த்திகள்தலத்தையெல்லாம் முறைமுறையாகசுற்றி
சேர்த்தியாயாழைமீட்டி கீர்த்திஇல்லாக்கீதம்பாடி
பார்த்தவரதிசயிக்க பகர்சடைமுடிவிலங்க
பூர்த்தியாய்கலகம்செய்ய புறப்பட்டுவருகின்றாரே.

நாரதர்-தரு.

திருலோகசஞ்சாரியும்   நானேநல்ல
தேவர்க்கும்மூவர்க்கும்   யாவர்க்குமேகலகம்
செய்துஉய்யவனும்   நான்தானே
தேவேந்திரன்தன்னையே   சேரும்படிஅகலிகையை
உண்மையுடன்செய்ததினால்   யோனியாகசாபந்தந்தார்   திரு

தன்மையுடன்சிவனார்கையால்   தந்தக்கனிதன்னைவாங்கி
விந்தையுடன்தொந்திவயர்   வேலனைமூட்டிவைத்தேன்
சிந்தையதுவேரதாக   சிவகிரியைசேரசெய்தேன்   திரு

முந்துங்கயிலைநாதன்தன்னையே   முத்திபெரும்தேவரிட
நத்திகெங்கைதானிருக்க   பத்தியுடன்மூவரையும்
பரிவுடனே   கலகம்செய்தேன்   திரு

முந்துமரைகளுணர்ந்த   தேவர்களும்மூர்த்திகள்
தன்னுடையமுரமைதனை   தானறிந்து
பார்த்திடவேஅனுசூய   பாவையரைகலகம்செய்ய   திரு

சரஸ்வதி-கொச்சகம்.

சீருறையும்லோகமெல்லாம் சென்றுநடமாடிவரும்
நேருறையும்கண்மணியே நீவாழிவாழிவாழி

நாரதர்-கொச்சகம்.

வாழியென்றுரைத்ததாயே வஞ்சமில்லாலோகமெல்லாம்
போஷித்துவந்ததின ... புந்திமகிழ்ந்திடுவாய்.

சரஸ்வதி-தரு.

எந்தன்பாலா சிந்தைமகிழ்சீலா
இந்தஉலகமெல்லாம் சுத்திவந்தாய்
மைந்தனேபார்த்ததெல்லாம் புந்திமகிழசொல்வாய

நாரதர்-தரு.

புந்திமகிழுகின்ற இந்தஉலகமெலலாம்
போய்பார்த்துவந்ததினுல் என்தாயே
நேயசங்கதியொன்றும் நானறியே புந்தி

சரஸ்வதி-தரு.

அறியேனானென்ற பரிவுள்ளபாலா
சரியாகநீவந்தசேதி எந்தனிடம்
பரிவாகசொல்லுமப்பா நாரதனே

நாரதர்-தரு.

நாரதனேஎன்ற தேவர்தொழும்தாயே
நாடிக்கடலைக்கொண்டு வந்தேனம்மாதாயே
தேடிவருந்தெனக்கு தாருமம்மா

நாரதர்-வேறுதரு.

தந்தேன்கடலைபாருமே இந்த
அகிலயுயிருக்கும் பரவியதாயே
தந்தேன்கடலை பாருமே
அந்தரத்தோருக்கேற்ற மைந்தன்தனக்குஇந்த
விந்தைக்கடலைதன்னை புந்திமகிழ்வியுடன்
௧-எந்தனுக்கதைவருத்து தந்திடவேணும்பொருத்து
தந்தாலேவாங்கி புந்திமகிழ்ந்திடுவேன் தந்

சரஸ்வதி-தரு.

மைந்தனேஎன்னுலாகாது இதைவருக்க
இரும்புகடலை யாகாது
சந்ததம்உலகுக்கெல்லாம் நின்றுதெரிவதாலே
விந்தைமனம்சோதிக்க வந்தநாரதாகேளும்
௧-புந்திமகிழவேபாருமே இந்தக்கடலையையாருமே
வருத்துதருவதர்க் கொருத்தருமில்லையே மைந்

நாரதர்-கனி.

வருக்கவேமுடியாதென்ற வாணியேசொல்லக்கேளாய்
மருத்துமேகடலைதன்னை மாதர்கள்வருப்பாருண்டோ

கருத்ததையுரைத்தாயானால் கமலியேஎடுத்துச்சொல்வேன்
வருத்தம்நீவைத்திடாயே மர்மத்தையுரைசேய்வாயே

வசனம்.

இந்தக்கடலேயை வருக்க உம்மால்முடியாது அப்படி இந்தப் பூலோகத்தில் யாராவது வருத்தார்களானல் அவர்களுக்கு நீஎவ்வி தமாய் போராய் அதை சொல்லுமம்மணி.

சரஸ்வதி-கவி.

வல்லவனேஇவ்வுலகி லாருமில்லே
வன்மையுள்ளகடலேதன்னே வருப்பதர்க்கு
சொல்லரியதிருமூர்த்தி தேவிமார்கள்
சுந்தரமேஅவர்களுக்கு மேலேகாப்பு
பல்லுலகில்யாவருமே கிடையாதப்பா
பங்கையனேஇதுஉண்மை யரிந்துசொன்னேன்
நல்லதப்பாபுவிதனிலே இருப்பாரானல்
நாங்களுமேஅவர்களுக்கு அடிமையாவோம்.

வசனம்.

இவ்வுலகில் மும்மூர்த்திகள் தேவிகளேத்தவிர பத்தினிமார்கள் கிடையாது அப்படி பூலோகத்தில் இந்த இரும்புக்கடலேயை வருத் தார்களானல் நாங்கள் அவர்களுக்கு அடிமையாகப்போவோம்இது உண்மை போய்வாருமப்பா நாரதனே.

நாரதர்-தரு.

ஆகாசந்தோஷ மாச்சுது
அன்புடன்கலகம் இன்பமாய்செய்ய
வாகாய்இன்றைக்கு வாச்சுது
நாகாபரணமணி நாதன்தேவியாளுமை
பாகானபார்பதி பாவையாளிடம்சென்று
சு-ஏகியேகயிலே இன்பமாய்செல்லுவேன்
தோகையாள்பார்ப்பதி சூக்ஷத்தைஅரிவேன் ஆகா

பார்ப்பதி-சிசபத்தியம்.

அஞ்சனமேனியாள் ஆயிமுக்கண்ணியாள்
அம்மைசிவகாமி யானமாது
மஞ்சனமாகிய மயிலன்னநடையினள்
மங்கையாள்கூர்விழி மையும்தீட்டி

தஞ்சமென்றோர்களை தற்காக்குமாதவள்
தையலாள்பாதியிட பாகம்பெற்ற

சுருள்.

வஞ்சியரிருபுறம் கவரிகள்வீசவே
வானவர்தேவர்கள் பூமாரிபெய்ய
மிஞ்சியேமரமணி பணிதுலங்க
ரஞ்சிததாதிய ருருகில்சூழ
செஞ்சிலம்புதண்டைகள் கீதம்பாட
கொஞ்சியேஉமையவளும் வருகின்றனே

பார்ப்பதி-தரு.

பரமன்தனக்குபாரி அரனைமனதில்கோரி
பார்பதாதேவிவாராள் செகரக்ஷகி
பார்பதாதேவி வாராள்
திரமுடன்வழிபடும் கடவுளைத்தொழுதிட
பாவையர்மங்கையர் மலரடிதாழ்ந்திட பா
சூலிகரகபாலி நீலிசெகரக்ஷகி
சோதரன்தங்கைவாராள் புண்ணியவதி
சோதரன்தங்கை வாராள்
மாலின்மைத்துனராள மன்னவர்தன்னைக்காண
காலினில்சதங்கைகள் கலகலவென்ன பா
அண்டப்புவனமெல்லாம் கண்டானந்திக்க
அம்மைஉமையவள்வாராள் உலகமாதா
அம்மைஉமையவள் வாராள்
மண்டலம்தன்னிலுள்ள மாதவரடியேற்ற
சண்டன்மாருதிகூட தான்வணங்கிபோற்ற பா
பாதகவினைகளை காதலுடனகற்றும்
வேதநாயகியும்வாராள் விமலியான
வேதநாயகியும் வாராள்
ஆவலொளியென்ன சோதிப்பதக்கம்துன்ன
மாதவள்மனமொத்த வாதையுடனேகூடி பா

பார்பதி-கவி.

அரிஅயன்அரியாநாதன் அவரிடப்பாகம்பெற்று
சரியுடன்உலகமெல்லாம் தற்காக்கும்நாதனை
பரிவுடனுசிர்மத்தை பரமனுர்க்களித்துஇன்று
உரிமையாய்நாதன்பக்கல் உத்தமிஇருந்திட்டாளே

பொதுவசனம்.

கயிலாசத்தில் உமாபார்பதியம்மன் கொலுவாக விற்றிருக்க அந்தசமையத்தில் நாரதர் சொல்லுகிற விதங்காண்க.

நாரதர்-கவி.

தாயாகிதந்தையாகி தற்கார்க்கும்உலகமெல்லாம்
மாயாசிவமாகி மங்கைஇடப்பாகமாகி
ஆயாமறைமுடிவில் ஐந்தெழுத்தும்நீயாகி
தயாநிதியாகி சங்கரியுமானிதியே
தேயாத்திருலோகம் திரிந்துவரும்நாரதனுன்
சேயாயுருவாகி சேவடியில்போற்றிசெய்தேன்.

வசனம்.

சகல ஆன்மாக்களுக்கும் கருணையை கொடுக்கின்ற உமாபார்வதி தங்கள் திருவடிக்கி நாரதன் அனேகநமஸ்காரம் அம்மணி.

பார்பதி-தரு

போற்றிசெய்தநாரதனே புவியின்மேலே
ஏற்றிதீர்க்காயுள்பெற என்னாளும்வாழ்குவாய்

நாரதர்-தரு.

வாழ்வேனம்மாபுவிதன்னிலே வள்ளலருளால்
தாழ்வில்லாமல்மாயமொழி தன்னைபாருமே

பார்பதி-தரு.

மாயமொழிஇன்னதென்று வர்மம்வையாமல்
வாயாரவேயுந்தனிட மனதைவிள்ளுவாய்

நாரதர்-தரு.

விள்ளுவேன்கேள்உமையவளே வள்ளலருளால்
கள்ளமில்லாகடலையது கண்ணால்பாருமே

பார்பதி-கவி.

கண்டிடக்கடலைத்தன்னை கண்மணிவருப்பதர்க்கு
எண்டிசைதனிலுமில்லை இரும்புநற்கடலைதன்னை
விண்டிடவருப்பதர்க்கு விமலனேமுடியாதப்பா
மண்டலம்தனிலேதந்தால் மங்கைநான்அடிமையாவேன்.

வசனம்.

இந்த இரும்புக்கடலையை வருக்கமுடியாது அப்படியாராகிலும் இதை கடலையாக வருத்தால் அவர்களுக்கு அடிமையாய் போவது நிச்சயம்.

நாரதர்-கவி.

அடிமையாய்போவேனென்ற அம்மணிசொல்லக்கேளாய்
விடுத்துநல்லுலகம்தன்னி விமலியேவருத்தாராகில்
தடுத்துநீசொன்னச்சொல்லை தாயேநீமரந்திடாயே
கடுகியேபூலோகம்சென்று இந்தக்கடலையைவருத்துவாரேன்.

வசனம்.

அம்மா இந்த உலகத்திலே உங்களைத்தவிர பத்தினிகளில்லை இந்தக்கடலையை வருக்க உம்மால்முடியாது அப்படி இந்தக்கடலை பூலோகத்தில் வருத்தாகளானால் நீ என்னவிதமாய்ப்போருய் அடிமையாய்போவது நிச்சயம் இதுஉண்மை இந்தவார்த்தையை மரந்திடாதே நான்பூலோகத்தில் சென்று இந்தக்கடலையை வருத்துவருகிறேன்தாயே

பொதுவசனம்.

இவ்விதமாக பார்பதி இந்தக்கடலையை வருக்கமுடியாதென்று சொல்லி இதைவருத்தவர்களுக்கு நான் அடிமையாய் போவேனென்றுசொல்ல நாரதர் வைகுந்தம்நாடிவர அந்தசமயத்தில் லட்சுமிதேவி கொலுவுக்கு வருகிறவிதங்காண்க.

லட்சுமி-கவி.

அலைகடலுதித்தமாதா ஆதிமாயவர்க்குபாரி
மலைகுடைபிடித்தநாதன் மலரடிகாணவேண்டி
விலையிலாபணிகள் விபரீதமாகப்பூண்டு
கலைமதிமுகத்தாளான கன்னிமங்கையுமேவராரள்.

லட்சுமி-தரு.

மாயவன்தனக்குப்பாரி மங்கையாள்மனதுதேரி
சாயலன்னநடையைப்போல தையலும்வாரேன்
பூவுலகம்தனிலுள்ள யாவரும்கண்டுகளிக்க
பாவைசிரோன்மணியான பைங்கிளிவாரேன்
செந்தாமரைவதனி மந்தாரைமலர்கள்சூடி
சுந்தரமாகியவண்ணத் தோகையும்வாராள்
சிலருக்கும்பாலருக்கும் தேடும்நாராயணசாமியர்க்கும்
சாலோகபதமளிக்கும் தையலும்வாரேன் மாய

நாரதர்-கவி

பத்தியாயுலகம்தன்னை பரிவுடன்சுற்றிக்கொண்டு
நத்தியேநாரிவாணி நங்கையைகலகம்செய்ய
வெத்தியும்புகழ்ச்சியான வேண்டுவோர்தனக்குதாயே
முத்தியும்பெருகவேண்டி முனிவன்நான்போற்றிசெய்தேன்.

வசனம்.

அம்மணி தங்கள் திருவடிக்கி நாரதன் அனேக நமஸ்காரம் செய்தேன் பாட்டி.

லட்சுமி-கவி.

திருலோகமெங்குசுற்றும் சீருள்ளமுனியேவாழி
பரிவுள்ளஎந்தன்பாதம் பணிந்ததால்மகிட்சியானேன்
சரிசரிஇன்றுநீயும் சார்ந்திடஎந்தன்பக்கல்
குரிகுணமின்னதென்று கூறுவாய்விபரமாக.

வசனம்.

நாரதமுனி இந்த புவனங்களெல்லாம் சுற்றி இவ்வனம்நாடி வந்த சமாச்சாரம் தெரியச்சொல்லுமப்பா நாரதமுனி.

நாரதர்-தரு.

பங்கையன்தனையளித்த   தாயேஇந்த
பரிவுள்ளசேயனை   காப்பாய்நீயே
இங்கனமேயுலகத்தில   எவர்கற்புடையாரென்று
பொங்கமாய்எந்தனுக்கு   பூரிப்பாய்சொன்னாலநன்று பங்

மங்கை-தரு.

நத்தியேவாணியின்புத்திரா   எந்தன்
நாயகர்தனக்கு   மித்திரா
உத்தமஅவர்பத்தினிஉயர்   கற்புடையோராகும்
சுத்தஉலகிலிதை   தாக்ஷியில்லாயலேதும் நத்

நாரதர்-தரு.

பத்தினிஎன்றுரைத்தாய்   பாட்டி
இதோபாராய்கடலையை   சீமாட்டி
அத்தியுரித்தணிந்த   அரனவர்சாக்ஷியாக்
வெத்தியுடன்வருத்து   விபரீதமாகத்தாரும் பத்

மங்கை-தரு.

இரும்புக்கடலைதன்னைவருக்க   அடா
இருமாப்போஉந்தனுக்கு   பெருக்க
குரிப்பானஉலகத்தில்   குற்றமறமனத்தால்
இருப்பாரோஎங்களைப்போல்   எவராலும்முடியாது இரு

நாரதர்-கவி.

பாகானமொழியுரைக்கும் பாட்டியேசொல்லக்கேளாய்
வாகானகடலைத்தன்னை வருத்திடும்பத்தினிதன்னை
வேகமதாகப்பார்த்து விரைவினில்சென்றுவாரேன்
நாகபீதாடும்நாதன் நங்கையேபாதம்போற்றி.

வசனம்.

அப்படி இவ்வுலகத்தில் இக்கடலையை வருத்தால் அவர்களுக்கு நீ அடிமையாய் போவது நிச்சயம் இந்தவார்த்தையை மறந்துவிடாதே நான்போய்வருகிறேன் இவ்விதமாக நாரதர் பூலோகத்தில் அத்திரிமுனி மனையைநாடிவருக அத்திரிமுனி சபைக்குவருகிற விதங் காணக.

அத்திரிமுனி-கவி.

காவிகாம்பரமும்பூண்டு கையினில்தெண்டுமேந்தி
ஆவினையொடுக்கிஞான அருள்பெரும்முனிவர்க்கெல்லாம்
தாவியேமேன்மையான தவம்செய்யமனதில்நாடி
மாவிளம்புனிதஅத்திரி மாமுனிவருகின்றாரே.

அத்திரிமுனி-தரு.

அருமறைப்பொருளான அரனைமனதில்கோரி
அத்திரிமகாரிஷிவந்தார் மாளிகைநாடி
அத்திரிமாமுனிவர் வாரார்
பெருமைக்குணமுமுள்ள புண்ணியவதியைகூட்டி
சு-பூதலம்தன்னிலே ஓதியுணர்ந்தவர்
மாதவர்தனக்குமே மாக்ஷிமைதந்தவர் அரு
மேவும்சடைமுடியும் விளங்கும்வெண்ணீரணிந்து
தாவும்உலகம்தன்னில் தயாபரனருளைக்கொண்டு
சு-சந்திரன்தன்னையே விந்தையாய்அளித்தவர்
சுந்திரமுள்ள ருக்ஷிதனென்ன அரு
வேதாகமங்களெல்லாம் ஓதியுணர்ந்ததீரன்
பாதகம்தன்னைஎல்லாம் பரிகரித்திடும்ஐயாரன்
சு-பார்ப்பனமாதர் வெண்சாமரைபோட
தார்ப்பதகுணமுள்ள தபசிகள்கூடி அரு
காலையிலெழுந்து கர்த்தனை துதிசெய்து
பாலைவனத்திலுள்ள பகர்தனமாளிகைகிட்டி
சு-பன்னிருகரத்தோன் பதமதைபோற்றி
உன்னிதமான சடையதுசாத்தி அரு

அத்திரி-கவி,

செஞ்சடாடவியும் புனலுடனணியும்
சீர்மங்கையோர் புரத்தில்தாங்கும்
கஞ்சனூர்சிரத்தை அரமுடிசெய்த
கழலடிபோற்றி செய்தேன்

வஞ்சமில்லாவானவர்தொழ
 வடியனைஇன்று முதலாய்
பஞ்சையேன்செய்யும் தவத்திர்க்கிரங்கி
 பன்புடன்கார்ப்பாய் போற்றி.

அத்திரி-கவி.

மதிமுகமானசிஷமார்களே சொல்லக்கேளாய்
அதிவிதமானபத்தினி அனுசூயைதன்னையிப்போ
பதியவரழைத்தாரென்று பாவையாள்தன்னையிப்போ
துதிபெரும்சபைமுன்பாக தோகையைஅழைத்துவாராய்.

வசனம்.

அதிசீக்கிரமாக எனது தேவியாகிய அனுசூயை அழைத்து வாரும் சிஷர்களே.

அனுசூயை-கவி.

புவனத்திலிணையாத புண்ணியவதியுமாகி
நவரத்தினகசிதமுள்ள நங்கையர்கூரக்கேட்டு
கவனத்தையுடையஅத்திரிமா முனிதன்னைக்காண
பவமொழித்தனுசூயைஎன்னும் பத்தினிவருகின்றாளே.

அனுசூயை-தரு.

அதிவிதமதிமுக ரதியைப்போலுருவதாய்
அனுசூயையம்மனும்வந்தேன் கணவன்பக்கல்
அனுசூயையம்மனும் வாரேன்
கதிபெரும்குணத்திநள் கமலப்பாதம்துலக்கி
நிதிபெரும்குணத்திநள் நேரில்வாரதெடுத்து
 சு-நீலகுங்கும பொட்டுமேலிட்டு
 சாலவசீகர தையலாளென்று அதி
அன்னம்இவள்நடைக்கி அயன்றுகின்றுமேஎங்க
சொன்னஇவள்மேனிக்கு சுந்தரம்கண்டுநாண
 சு-தோகைமயிலழகுபோல நடையுடையாள்
 வாகையுடைய மணவாளனைநாடி அதி
சுந்தரஇதழைக்கண்டால் செந்தாமரையும்நாணும்
அந்தமுடையபல்வரிசை முத்துப்போலவேதோணும்
 சு-ஆலிலேபோலது வயாதுடையாள்
 சாலவும்கிளிபோல் சார்பழகுடையாள் அதி

குயில்மொழிக்கொப்பான கோதைஇவளாமென்ன
கயல்விழியஞ்சனக் கருதும்மைதீட்டியே
சு-கற்பதுடையா ளென்றுமேதுதிக்க
கற்பதமளித்து மாதர்கள்மதிக்க அதி

அநுசூயை-வேறுதரு,

மாதிதோ பணிந்தேன்வந்தனம் மலர்பாதத்தில்
மாதிதோ பணிந்தேன் தருணம்
மாதவள் என்னைநீரும் ஆதரவாகக்காரும்
மண்ணும்புகழென்னையா நாதுன்பாதம்தனிலே மாதி

அத்திரி-தரு,

மங்கைமகராசியாய் வாழ்வாய்
இந்தமாநிலம்தன்னிலே மங்கை
மங்கையேகாதுன்னை பொங்கமுடனழைத்த
சங்கையில்லாமலே சாற்றுவேன்கேளுமே மங்

அநுசூயை-தரு.

ஆடரவம்பூண்ட பாதனார்பதம்பணியும்
தேடரியநாயகமே தேடியெனையழைத்த
சேதிகள்தன்னையே ஓதிடுவீரே
மாதவனுந்தன் பாதமேவந்தனம் ஆட

அத்திரி-தரு.

மாமயிலனுசூயையே கேளாய்
இந்தமாநிலந்தன்னிலே மாமயி
மாமயிலனுசூயையே மாதவங்கள்யான்புரிய
மண்டலந்தன்னிலே விண்டிடவும்
தொண்டுகளசெய்யவும் பேசரேனடி மாம

அனுசூயை-கவி.

தாண்டவமாடும் தற்பரனருளே
பூண்டுமேலேயும் புண்ணியாவருவீர்

அத்திரி-வேறுதரு.

தவம்செய்யநடந்தாரே அத்திரிமுனி தவம்செய்
தவம்செய்யநடந்தாரே பவவினைபோக்கவே
சிவகுருபாரவென்று சித்தத்தில்மனம்தேரி தவம்

மண்டலத்தோர்புகழ் யெங்களைகண்டுமே
மண்டலம்தனிலுள்ள மாமுனியோர்க்கெல்லாம்
சண்டமாருதிபோல் தான்மிகசீரியே தவம்

நாரதர்-தரு.

தெய்வலோகம்தன்னைவிட்டு தாவியேபூலோகம்கிட்டி
சீருடன்நடந்துவாரார் நாரதமுனி-சீருடன்
தாவியேமுவர்பத்தினி தங்களைகலகம்செய்ய
ஆவலுடன்நாடிவாராரே அத்திரிமுனி
மாளிகையை தேடிவாராரே
பத்தியுள்ளஅத்திரிமுனி சித்தத்திற்குகந்ததேவி
பாரியாளைகலகம்செய்குவேன் இன்றையதினம்
பாரியாளைகலகம் செய்குவேன்
என்னைப்போல்கலகம்செய்ய இன்னிலத்திலாருமில்லை
அன்னவன்புகழைபேசியே நாரதமுனி
அனுசூயைமாளி தேடிவாரேன் தெய்

அனுசூயை தரு.

பரமன்பாதம்நிதம்பணியும் பாலா
ஆவலாய்தாவியே நிதம்
கரமுடன்யென்னைக் காத்தருள்
கழலடிபணிந்தேன் சருணம்
திருலோகமெங்கும்சுற்றி தேடியோடி
நாடிவந்ததை சொல்லும்
பரிவுடன்பூலோகம் கிட்டி
பாவையாள்மனைதாவியே எட்டி

நாரதர்-கவி.

பன்னுமிவ்வுலகம்தன்னில் பத்தினியாளேவாழி
துன்னுமுன்பிராணநாதர் துணைவரும்எங்கேயம்மா
வென்னுள்ளம்களிக்கவேதான் விபரீதமாகவாழி
அன்னுமுன் அடிபணிந்தேன் அம்மணிவாழ்குவாயே.

அனுசூயை-தரு.

மண்டலம்புகழ்கின்ற மாமுனிநாத
மங்கையுரைசெய்வேன் யானினி
மானிலம்தன்னிலே மாக்ஷிமைதங்கிய
மாதவம் செய்யசென்றார்

நாரதர்-தரு.

மாதவம்செய்யும் மாமுனிஅத்திரி
பாதம்துதிசெய்யும் மங்கையாளான
அனுசூயைதேவியே மர்மமரிகுவாய்

அனுசூயை-தரு.

அரிகுவாயென்றஅருமுனிநாத அகிலபுவனத்தில்
பரிவுள்ளஉலகோர்க்கெல்லாம் பகரும்பெரியவரே

நாரதர்-தரு.

ஆரென்றுஎன்னை அன்புடன்கேட்ட
அம்மணி நீவாழி
இந்தபரிவுள்ளஉலகம் பாரெங்குஞ்சுற்றினேன்
பத்தினிகாணே னம்மா

அனுசூயைகவி.

காசினியெல்லாம்சுற்றி காரணப்பொருளாய்வந்த
மாசிலாமுனியேஎந்தன் மனைதனைநாடிவந்த
விசியேசேதிதன்னை விளம்பினுலெனக்குநீயும்
உசிதமாகநானும் உளமதுமகிழுவேனே.

வசனம்.

கேளும் நாரதமுனியே நமது கிரகமாகிய மனையை நாடிவந்த சமாச்சாரம் தெரியச்சொல்லும் முனியே.

நாரதர்-தரு.

சொல்லுவேன்கேளுமம்மா அனுசூய
சுந்தரமே யுனக்கு
பல்லுலகம்தன்னில் பாரெங்கும்சுற்றினேன்
பத்தினிகாணே னம்மா

அனுசூய-தரு.

காணேனென்றுரைத்த முனிநாதா
காரணத்தைச் சொல்வேன்
மாளுள்உமையவள் மங்கைசரஸ்வதி
மாமுனிதானு முண்டு

நாரதர்-தரு.

அரிகுவாயென்றுரைத்த அனுசூய
அஞ்சுகமே வாழி
பரிவுள்ளஉலகம் பத்தினிமார்களை
பாரெங்கும் நானறியேன்

அனுசூய-தரு.

தெரிகுவேனென்றுரைத்த முனிநாதா
தேவரீர்சித்தப்படி இந்த
திரிலோகமெங்கும் சுற்றிடுமாமுனி
தேவரீர் எப்படியோ.

நாரதர்-கவி.

பாரிலுள்ளோர்கள்போற்றும் பத்தினிமாதேவாழி
நாரியனுலேஇந்த நற்பெருங்கடலைத்தன்னை
தீதரவருப்பதர்க்கு தெரியவேமுடியாதென்றார்
கார்பெரும்கர்ப்புநீயே இந்தகடலையைவருத்திடாயே.

வசனம்.

அம்மணி இந்த உலகத்தின்கண் வசிக்கின்ற மாதர்களாலும் மேலும் மும்மூர்த்திகள் பெண்சாதிகளாகிய சரஸ்வதி லட்சுமி ஈஸ்வரி மூவர்களாலும் முடியாதென்றார் நீ வருத்துக்கொடும் அம்மணி.

அனுசூய-தரு.

முந்துமாமறையுணர்ந்த மாமுனி
முடியாதென்ற படியாவிதை
முச்சிதம்தனையுரைப்பாய் தவமுனி

நாரதர்-தரு.

கற்புடையமாதர்க ளிப்பாரினில்
கடலைத்தன்னை திடமதாக
நற்பெரும்பதிவிரதை வருப்பார்கள்

அனுசூய-தரு.

வருப்பார்களென்றுசொன்ன நாரதரே
வஞ்சியாள்காப்பு மிஞ்சியமாது
ஆனவிதைவருக்க தடையில்லை

நாரதர்-தரு.

தந்தால்எனக்குமிக சந்தோஷம்
சாலோகமாதா பூலோகம்தன்னில்
விந்தைகற்புடையாளென்று எண்ணலாம்

அனுசூய-கவி.

ஆயாமறைமுடியை அறிந்துணர்ந்தோரேகேளாய்
நேயாயுன்கருத்தைப்போல நிதிபெரும்கடலைதன்னை
மாயவன் அருளினாலே மங்கையாள்வருக்கஇன்று
தாயெனமனதில்கோரி தையனும்வருக்கின்றேனே.

வசனம்.

கேளும் நாரதமுனியே தங்கள் மனதின்படியே இதோ எம்பெருமானுடைய கிருபையால் இக்கடலையைவருக்க சித்தமாகினேன் தேவா.

அனுசூய-தரு.

வருத்தேனேகடலை அனுசூய
வருத்தேனே கடலை
வருத்தேனேமாமுனி பெருத்தஇரும்புதன்னை
திருத்தக்கடலையாக செய்ததைவாங்கி வரு

அத்திரிமாமுனி பத்தினியானதால்
மெத்த இரும்புகழ் பொர்ப்புள்ளகடலை வரு
மண்டலம்தனிலுள்ள பெண்டுகள் தனக்கெல்லாம்
விண்டிடநாதன் விருப்பப்படிநடக்க வரு

அனுசூய-கவி.

ஆதிவைகுந்தவாசன் அரியயனுந்தியிலுதித்தோனை
நீதியாய்சத்தியலோகம் நிமலனாருளினாலே
சோதியாயுருவாய்வந்த சுந்தராவாரும்வாரும்
மாதியாய்கடலைத்தன்னை மகிட்சியாய்வருந்தேன்பாராய்.

வசனம்.

கேளும் நாரதமுனியே எம்பெருமானுடைய அருளினாலும் இதோ எனது நாதனுடைய சொல்கடவாத கர்ப்பணியானபடியால் இதோவருத்தேன் பெற்றுக்கொள்ளும் முனியே.

நாரதர்-தரு.

அத்திரிமாமுனி சித்தமதேவியாள்
வெற்றிபெரும்கடலை வருத்தாள்
பத்தினிஇவளென்று னெரித்தாள்

இந்தாரும்அம்மணி என்முந்தாணிதனனிலே
வெந்தக்கடலைத்தன்னை கொடுமென்றார்
அவர்புந்தியிலானந்தம் கொண்டார்
பெற்றதோர்கடலையை சித்தம்தொழும்தேவியாள்
சத்திமங்கைசரஸ்வதியை கலகம்செய்ய
சித்தத்திலானந்தம் கொண்டுகயிலைசெல்வேன்
சென்றதோர்கயிலையில் வந்தேதிவ்விடம்நாடி
அன்றுக்கயிலைநாதன் அவர்க்குப்பாரியே
கின்றஉமையவள் பதத்தைகோரியே அத்

நாரதர்-வசனம்.

கேளும் உலகமாதாவாகிய உமாபார்ப்பதி தங்கள் திருவடிக்கி வந்தனம் வந்தனமம்மாள் தாயே.

ஈஸ்வரி-தரு.

நாரதமுனிவரேவாரும் நானிலம்புகழ்ந்திடநீரும்
நேரேஎந்தனைத்தேடி நீஇங்கேவந்தாயே
பாரோரறிந்திட பதந்தனைசொல்வாயே நாரத

நாரதர்-தரு.

அம்மணிநீஇங்கேவாரும் அரிக்கடலைகண்ணால்பாரும்
இம்மானிலம்தனில் எவராலும்முடியாது
செம்மையாய்வருத்தது சிவனார்க்குதருவாயே

ஈஸ்வரி-தரு.

வருத்தது கிசமாமாமுனி வம்புக்காரியவள்தானினி
பெருத்ததோர்தேவியாள் பேரென்னஊரென்ன
மருத்துச்சொன்னாலந்த மங்கையைவிடுவேனா வருத்

நாரதர்-தரு.

அழகைச்சொல்ல என்னால்முடியுமோ
ஆதிசேஷன்நாவு போதுமோ
புகழைச்சொல்லஇந்த புவியிலுமில்லையே
அகம்மகிழ்அத்திரி இவன்சேதிஅனுசூய அழ

ஈஸ்வரி-கவி.

நாரதமுனியேகேளாய் நானிலம்தன்னிலேதான்
தீதரஉலகம்தன்னில் திருமூர்த்திதேவிமார்கள்
போதர்கள்இருந்தாலே பூவையாள்இருந்துமென்(
மாதரைகர்ப்பழிக்க என்மன்னனைதேடிவாரேன்.

வசனம்.

பூலோகத்தில் எங்களுக்கு மேலாகிய பத்தினியை கர்ப்பழிக்க என்மன்னரைநாடி செல்கின்றேன் நீபோய்வாருமப்யா நாரதமுனியே.

பொதுவசனம்.

இவ்விதமாக உமையாள் சிவபெருமானை நாடிவர அந்தசமையத்தில் உமாபரமேஸ்வரமூர்த்தி கயிலைகிரியில் விற்றிருக்கிற விதங்காண்க

பார்வதி-கவி.

ஆதியாய்உலகம்தன்னி லமர்ந்தநாதன்
அரியயனுமகாணாத அமலநாதன்
சோதியாயபஞ்சமுக வதனம் தன்ன
சூலமுடன்மழுவாளும் காத்திலேந்தி
பாதிமதிபிறையணிந்த பரமனாதன்
பாவையர்கன்னிதம்பணியும் சோலாகாலன்
நீதிபெரும்கெங்கையாளை சிரசில்வைத்த
நிபுணருமேகொலுவாக வருகின்றாரே.

சிவன்-தரு.

பரமசிவனார்வந்தனர்
பரமசிவனார்
அரனெரிநீதியோங்க
காமுடையவிஷ்ணு
சு-காரணப்பொருளாய்
ஆரணேனுடு

பாதிநதிமதியோடுமணிந்தவர்
வந்தனர்
ஐயன்வண்டணம்தாக்க
கைபாலாகுதிதந்தவெங்க
தாரணியோங்க
பூரணதான பரம

முடிவில்லாசிரசினில் மூன்றும்பிறையணிந்தேன்
படிமிசையோரும்போற்ற பாரெங்கினும்திரிந்தேன்
சு-பண்ணும்முனிவர்கள் திண்ணப்படிதாழ
நண்ணும்பரம்பணி நாதனுமென்ன பரம
சிலையைவில்லாய்வளைத்தேன் திருபுரனைஎரித்தேன்
வலையவேடமும்தாங்கி மாமகளைபுணர்ந்தேன்
சு-வம்புசெய்காளியோ டாடியயீசன்
சங்கராசம்புவே வென்றிடும்நேசன் பரம
நரியைப்பரியதாக்கி நாடும்பாண்டியனுக்காய்
சரியெனவாதவூரார் சாந்துமந்திரமோத
சு-சார்ந்துநரிபரி யாசவேகூவ
பார்த்தவர்சிவனென பன்புடன்மேவ பரம

ஈஸ்வரி-கவி.

அத்தனேபோற்றிபோற்றி அடியவர்க்குகந்தநாதாபோற்றி
முத்தர்க்குஉகந்தநாதா முதல்வனேபோற்றிபோற்றி
நத்தியேஇவ்வுலகம்தன்னில் நங்கைபாள்பத்தினிஎன்று
பத்தியாய்இருக்கின்றுளாம் பரமரேஅறிகுவாயே.

ஈஸ்வரர்-தரு.

அகிலத்தில்பத்தினி அறிவைஇருக்கிறதை
ஆரால்தெரிந்துகொண்டாய் பார்ப்பதிே

பார்ப்பதி-கவி.

கைபில்மழுமானேந்தும் கர்த்தனேநா[illegible]
இக்காரணத்தைகண்டறிந்தேன் பிராணநாதா

சிவன்-தரு.

நாரணன்பேரனுன நாரதன்சொன்னதால்
நங்கையேகலகமுண்டு பார்ப்பதியே

பார்ப்பதி-தரு.

கலக்கமல்லஅத்திரி கன்னிஅனுசூயையாள்
கர்ப்புக்கரசியென்றார் பிராணநாதா

சிவன்-கவி.

பன்னியேமொழியுரைக்கு பசுங்கிளியாளேகேளாய்
இன்னிலம்தன்னில்கர்ப்பு இசைந்திடும்பத்தினிதன்னை
துன்னியேஅழித்துவாரேன் தோகைநீஅஞ்சவேண்டாம்
மின்னிடையாளேஇங்கு மேன்மையாய்இருந்திடாயே.

வசனம்.

கேளும்பெண்ணே பார்ப்பதி நீயாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம் நான் பூலோகம்சென்று அந்தகன்னியாளுடையகர்ப்பை அழித்துவாரேன் பெண்ணே பார்ப்பதி.

நாரதர்-தரு.

வைகுந்தத்தைநாடியே வருகிறேனேஓடியே
அரிபசனைபாடியே ஆதிமறையைதேடியே
பையரவமாடியே பங்கயனைநாடியே
மங்கையாளைகலகம்செய்ய மாசுஷிமையாகஓடியே
வைகுந்தம்நான் வந்தேனே
மங்கையாளை கண்டேனே
செய்வேன்கலக மென்றுமே
சேவித்திதோ நின்றேனே

மங்கை-கவி.

உண்மையாய்உலகமெங்கும் உத்தமாதிரிந்துழன்ற
கண்மணிஇங்கேவந்த காரணமின்னதென்று
வண்மையாயுரைக்கவேணும் வஞ்சமில்லாதபாலா
நண்ணியஉலகம்தன்னில் நலம்பெறவாழ்குவாயே.

நாரதர்-தரு.

வாழ்குவாயென்றுசொன்ன மாதே
வஞ்சியேகடலைதனை பாருமே

மங்கை-தரு.

என்னஅதிசயம் பாரிதோ
எவ்விதமாய்வருத்தாள் பாலகா

நாரதர்-தரு.

வருத்தவவிவ்வுலகம்தனில் மாதே
மங்கையாள்மாதொருத்தி கோதே

மங்கை-தரு.

மாதவள்பேரென்ன ஊரென்ன
மாமுனியேநீயும் சொல்லுவாய்

நாரதர்-தரு.

சொல்லுவேன்கேளு மந்த
சுந்தரிஅனுசூயையான மாது

மங்கை-கரு.

அனுசூயைகர்ப்பதை யானுமே
அழிருவேனென்றுமே தானடந்தாள்.

நாரதர்-கவி.

மாயவன்தனக்குபாரி மங்கையேசொலக்கேளாய்
காலத்தில்நேமநிஷ்டை கட்டளைமுடிக்கவேண்டும்
ஞாலத்தோர்புகழ்ந்துபோற்ற நான்சென்றுவாரேனம்மா
மூலமுச்சுடரேயும் மொழிஎனக்குரைசெய்வாயே.

வசனம்.

இவ்விதமாக நாரதர் கடலையைவருத்திவந்து லட்சுமியிடம்கொடுக்க அதைக்கண்ட லட்சுமி நாய்தெய்வப்பெண்ணான பத்தினியாயிருந்தும் நம்மைவிட இந்தபூலோகத்தில் பத்தினிஇருக்கக் கூடாதென்று தனது நாயகனாகிய விஷ்ணுமூர்த்தியை அழைத்து கர்ப்பை அழிக்கச்செய்வது.

விஷ்ணு-கவி.

ஆதியாயுலகினையளந்தநாதன்
அசுரர்களைகருவறுத்த ஆதிமாயன்
சோதியாய்சூரருக்கு அமுர்தமீந்தக்கையன்
குகைத்துடன்நாருகனை வதைத்தநாதன்
கீதியாய்கீசகனை வதைத்தவேதன்
நெறிமுறையில்பஞ்சவர்க்கு தோழனான
வேதியனுமாயெலிக்கி தோன்றிநின்ற
விஷ்ணுமேகொலுவாக வருகின்றாரே.

விஷ்ணு-தரு.

வைகுந்தவாசரிதோ வந்தார்
மன்னுவின்னுலகம் என்னுமளந்தவர்
வம்பர்க்குமுத்திதந்தார் வைகுந்தவாசர்வந்தார்
பையரவமீதிலாடும் வையும்உலகமெல்லாம்
நாதன்புகழ் கொண்டாட வை

மங்கைசரஸ்வதிமார்பில் தரித்திடும்நாதன்
இருபுரமும்சங்குசக்கரம் துலங்கிஇலங்கிடும்வேதன்
துளபமாலைஅங்கமதில் திருநாமம்தரித்திடும்வேதன்
உலகமெல்லாம்பொங்கமாய் குக்ஷியில்வைத்துமே
காத்திடும்லோலன் பன்னீராயிரம்
சு-பாவலர்கோவையர் மாதர்கள்சூழ
மாயவனென்றும் மங்கையர்தாழ வை

ஆயர்குலமதில் யாதவனாகபிறந்தேன்
உரியிலவெண்ணை பால்தயிர்திருடியே
பாவையர்மத்தடி பட்டேன்
அவர்களிடதூயஆடையை திருடியே
கிளையினிலொளித்தேன் மாதவர்கள்
மாயவனென்றுமே மலரடிபோற்றியே
நிற்க கோவலருக்கு
சு-சாலோகபதவியை தந்துமேஅளித்தேன்
காதலைநீக்கியே சேலையையளித்தேன் வைகு

சோமுகாசூரனைவதைத்திட மச்சமுமானேன்
தேவர்கமுர்தம் ஆழியைகலக்கியே
அமுர்தமளித்திட்ட வேதன்
தாருகாவன மாமுனிமதமதை
அடக்கவேமோகினியானேன் திருபுரத்தை
தகித்திடஇடபமாய் ரதத்தினில்கொம்பையும்
தந்தேன் பிரகலாதன்
சு-அரிகரியென்ற ஆயத்தைதீர்த்தேன்
சரியுடன்இரணியன் உடலதைகிழித்தேன் வைகு

வேதமும்தோண்டிய காமனையளித்திட்டபாதன்
உந்தியினின்று தாமரைகொடியினில்
தங்கியபிர்மனை ஈன்றேன்

கயிலைநாதன்தன்னிட சிரமதில்தங்கிய
கெங்கையை தந்தேன்
சிவனின்றகந்தர்க்குகந்த வள்ளி
தெய்வானையளித்தேன் அவர்க்கு
சு-கணபதிதன்னையே சிரமதிற்கொண்டு
பதிபுகழ்நாரணன் பதமதைவிண்டு வைகு

லட்சுமி-கவி.

மண்ணும்விண்ணளந்தபாதா மங்கையுன்பாதம்தன்னில்
கண்ணனேபோற்றிசெய்தேன் காரணமறிந்திலாயோ
குண்ணியேஇரண்டுநாளாய் கோதையும்மனதுவாடி
நண்ணியகடலைத்தன்னை நாரதன்தந்தான்பாரும்.

வசனம்.

கேளும் பிராணேசா நாரதன் இரும்புக்கடலை வருக்கும்படி சொன்னார் நாங்கள் முடியாது என்றுசொன்னோம் இந்தக்கடலையை பூலோகத்து மாதர்கள் வருத்தால் நீங்கள் எவ்விதமாய் போவீரெ ன்று கேட்டார் நாங்கள் அவர்களுக்கு அடிமையாய்ப் போவோமெ ன்றுசொன்னோம் இதோ இந்தக்கடலையை எங்கள்கையில் தந்தார் பாருமையா சுவாமி.

விஷ்ணு-தரு.

ரத்தினப்பசுங்கிளியே பெண்ணே
நாயகமான மங்கைகண்ணே
உத்தமியேபாதம் உகந்துமேபணிந்தாய்
சித்தமிகக்களித்தேன் சீருடன்வாழ்குவாய்

லட்சுமி-தரு.

வாழ்குவாய்என்றுசொன்ன நாதா
மாமுனிநாரதன்வார்த்தை நீதா
தாழ்வாகவேகிளைந்து தையலென்னிடம்வந்தா
பாழிரும்புக்கடலை பதமாய்வருக்கச்சொன்னான்

விஷ்ணு-தரு.

வருக்கச்சொன்னனென்ற வஞ்சியே
வாய்ப்பதட்டமாக மிஞ்சியே
பெருக்கஉலகம்தன்னில் இரும்புக்கடலைதன்னை
செருக்கவருக்கும்பத்தினி இருப்பாளேஉலகத்தில்

லட்சுமி-தரு.

உலகத்தில்அத்திரி மாமுனி
உகந்தஅநுசூயை பத்தினி
இலகொத்தக்கடலையை இனபமாய்வருத்துமே
கலகத்துநாரதன் கைதனில்தந்தாளாம்

விஷ்ணு-கவி

மதிநுதல்வதனமுள்ள மங்கையேசொல்லக்கேளாய்
அதிவிதமானபத்தினி அநுசூயதேவியாளை
சதிசெய்துகற்பழித்து சார்ந்திடஉந்தன்பக்கல்
விதியுடன்வருவேனபெண்ணே நேரிழைவிடைதாராயே.

பொது வசனம்

இவ்விதமாக; விஷ்ணுவானவர் லட்சுமியிடம் விடைபெற்றுக்கொண்டு பூலோகம்செல்ல அப்போது நாரதன் சத்தியலோகம் சென்று சரஸ்பதியிடம் கலகம்செய்வது.

நாரதர்-தரு,

பாருநீயம்மா அன்புள்ளக்கடலை
பாரில்வருத்து வந்தேன்

சரஸ்வதி-தரு.

சீர்புகழ்மைந்தா யாரிதைவருத்தார்
சிக்கதைமகிழ்ந்து சொல்வாய்

நாரதர்-தரு.

அத்திரிமாமுனி பத்தினியான
அநுசூயை இதைவருத்தாள்

சரஸ்வதி-தரு.

பாரிலவளே பத்தினியாரும்
பரிவுள்ள கண்மணியே

சரஸ்வதி-கவி.

ஆசையும்அன்புமுள்ள அண்ணலேசொல்லைக்கேளாய்
பூசமாய்நமதுமைந்தன் பண்புள்ளநாரதன்தான்
வீசவேஇரும்பால்செய்த விபரீதக்கடலைதன்னை
வாசமாய்வருக்கச்சொன்னான்முடியாதென்றுரைத்திட்டேனே

வசனம்.

கேளும் பிராணேசா நமதுமைந்தனானவன் இதோ இரும்பால் செய்தக் கடலையை வருக்கச்சொன்னான் முடியாதெனறேன் பூலோகத்தின்கண் அந்தக்கடலையை வருத்து வந்தான் நாதா.

பிரமன்-தரு.

அஞ்சுகமேபிஞ்சணிந்த ஆனார்தங்கையே
வெகுதிரமாய் இங்கையே
அடிவஞ்சியேஇரும்புதன்னை வருப்பவர்யாரோ

சரஸ்வதி-தரு.

வருப்பவர்யாரென்றுசொன்ன வல்லளேகேளாய்
விள்ளுவேன் மீளா
வணக்கமுள்ளஅனுசூயை யாளும்வருத்தாள்

பிரமன்-தரு.

வருத்துதந்தசிருத்தஇடை வஞ்சிகர்ப்பையான்
அவள்மிஞ்சும் கர்ப்பையான்
பொருத்தமாகபூமிதன்னில் பூவையரேபார்த்துவாரேன்

சரஸ்வதி-தரு.

பார்த்துவாரேன்என்றுசொன்ன பண்புள்ளநாதா
எனக்கன்புள்ள ஜீவதா
பத்தினிகர்ப்பையழித்துபார் புகழுவருவீரே

பொதுவசனம்.

இவ்விதமாக மூவர்களும் தங்கள் தேவிமார்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு பூலோகம்நாடி அனுசூயையாள் கர்ப்பை யழிக்கும்படி ஆண்டிவடிவமாக அத்திரிமகாரிஷி மனையைநாடி வருகிற விதங்காண்க.

மூவர்கள்-கலி.

திருமூர்த்திமூவர்களும் ஒவ்வொரு ஆண்டியாகி
திகழொளிபோல் காவிருத்திராஷ்டம்பூண்டு
வரியொத்த அனுசூயை மனையைக்கிட்டி
வல்லசிவன்பிரம்மனுடன் மாலும்கூடி
சரியொத்த தீர்க்கமுள்ள கிழவனாகி
சபாசெனவேயாவர்களும் கண்டானந்திக்க
கரியதுபோல்நடையுடைய தேவியாளை
கண்டிடவேமனைநாடி வருகின்றாரே.

மூவர்கள்-தரு.

ஆண்டியுமானார் திருமூர்த்திகள்
ஆண்டியு மானார்
தாண்டவமாடியே ஆண்டவனும்கூடி
பாண்டுரங்கனை பங்கையனும்தேடி ஆண்

பத்தினிகர்ப்பை யழிக்குறேன்
பாவையாள்மனதை கெடுக்குறேன்
வெத்தியாய்அத்திரி மாமுனிதவம்செய்யும்
நத்தியரிந்துமே நாங்களும்கூடியே ஆண்

நாரதன்சொன்னசொல் அரிந்துமே
நங்கையவள்சேதி தெரிந்துமே

பாரும்எங்களிட பராக்கிரமமரிந்துமே
சிரதுபெருகிட சிரப்புள்ளமனைதன்னில் ஆண்

மங்கைஅனுசூயை மனையதைநாடியே
மங்கைநிலையதை எங்கள்சமர்த்தினால்
பொங்கமா யழித்திட
பூரிப்பாய் செல்லுவோம் ஆண்

பொதுவசனம்.

இவ்விதமாக திருமூர்த்திகளும் ஆண்டியாக பூலோகம்நாடிவரு கிறபோது நாரதமுனி இவர்களிடம் கலகம்செய்கிற விதங்காண்க.

நாரதர்-தரு.

சத்திசிவமானுமே சதுர்முகனும்கூடியே
வெத்தியுடன் ஆண்டியாகி வருவதையும்கண்டிட
இத்தருணமல்லவே இவர்கள்சேதிவிள்ளவே
சித்தமதில்மகிட்சியாகி சென்றவழியில்நின்றிட
சென்றவழியில்நின்றேனே தேவர்பாதம்கண்டேனே
நின்றுபாதம்தெண்டமே நேரில்செய்துகொண்டேனே சத்

நாரதர்-தரு.

கங்கையைசடையில்வைத்த வாசரே
நன்னியதேவா அன்னவாகனு
பொங்கமவழி நடந்துவாரும்கோள்

மூவர்கள் தரு.

வருகிறோம்மூவரும்பின்னால் மாமுனி
மாயவரும் நேயமாக
பெருகவேமுனிவர்பின்னால் செல்லுவோம்

நாரதர்-தரு.

காட்டுரேன்மூவருங்கூடி செல்லுங்கோள்
கன்னியாள்மனை உன்னிதமுடன்
மேட்டிமையாகத் தெரியுதுபாருங்கோள்

மூவர்கள்-தரு,

பார்த்துமேமாளிகை கிட்டிவந்தாரே
முனிவன்சொன்ன வனிதைதன்னை
பார்த்திடமுகங்கள் சோர்ந்துவாடுதே

நாரதர் வசனம்.

கேளுங்கோள் தேவர்களே அதோ தெரியப்பட்டதுதான் அனுசூயைமாளிகை போய்விடுங்கோள் தேவர்களே.

விஷ்ணு-சிசபத்தியம்.

மைத்துனசொல்லுவேன் மங்கைஇவளிட அழகை
மாதரெல்லாம்இவளுக்கீடு உலகிலில்லை

சிவன்-சிசபத்தியம்.

தேகமெல்லாம்சோருது என்மனம்வாடுது
சேல்விழியையான்மருவி சேர்வதெப்போ

பிரமன்-சிசபத்தியம்.

இத்தரைமீதினில் இவளெங்கள்மாதரல்ல
எந்தனுக்கிவள்சோடி யேற்குஞ்சொல்ல

விஷ்ணு-சிசபத்தியம்.

எத்தனைசொன்னாலும் எற்காதுஉங்களுக்கு
ஏதேதுஇவளெந்தன் பாரியாகும்

சிவன்-ஓரடி.

பத்தியுனக்கில்லை போம்போம்காணும்

பிரம்மா-ஓரடி.

நத்திஇவளெந்தன் பாரியாகும்

விஷ்ணு-ஓரடி.

வெத்திபெரும்பிரம்மனே உனக்குதாயாகவேண்டுமே

சிவன்-ஓரடி.

மைத்துனஉனக்கு தங்கையாகவேணும்

விஷ்ணு-தரு.

மைத்துனரேஉனக்குபுத்தி கொஞ்சமில்லையா
மார்க்கமே உனக்கேற்குமே

சிவன்-தரு.

பத்தியாகவேஎட்டுபட்டப ஸ்திரியுமிருக்க
பாவையாளுனக்கு தேவையா

பிரம்மன்-தரு.

தேவைஎனக்குஅந்தமாதர் மேலேநினைவு
தேடுதேமனம் வாடுதே

விஷ்ணு-தரு.

வாடுதேஎன்றுசொல்லி வம்புசெய்யவேண்டாப்பிரம்மா
வருவாளாமுத்தம் தருவாளா

சிவன்-தரு.

வருவாளாஎன்றுசொன்ன தையலெனக்குசொந்தம்
தடுக்காதேசும்மா பிரிக்காதே

விஷ்ணு-கவி.

மரிக்காதேஎன்றுசொன்ன மைத்துனசொல்லக்கேளும்
கருத்தினில்சேரஎண்ணம் காரிழைவருகுவாளோ

சிவன்-கவி.

அரிக்குமுன்சிவனென்பார்கள் அதிவிதமவளைச்சேர
வருத்தம்நீவைத்திடாதே வாடுதேதிரேகமெல்லாம்

திருப்புகழ்ச்சந்தம்.

பிரமன்-தரு.

இவளோ வொருத்தி உலகெங்கும் சத்தி மனையாள முத்தி
தருவாளோ பத்தி இளமுலைமானேர்

சிவன்-தரு.

இடையோ சிருத்த நடையே பெருத்த மயிலன்னம் போலே
வொயிலான மாதே வருவாயே

விஷ்ணு-தரு.

புருவமோ வில்லு பவழமோ பல்லு குயில்போல சொல்லு
இதழ்தா மரைப்பூ இவள்கோதை

பிரமன்-தரு.

விழிசேல் கருப்பு இமை பார்ப்பவர்க்கு கும்பமிரண்டும் பந்து
களிபோல் திரண்டு தருவாளோ

சிவன்-தரு.

வயர்சிற் றெரும்பு அரையே தளர்ந்து தடையே கதித்து
இளவாழை தண்டோ மடமாது

விஷ்ணு-தரு.

கனுக்காலோ இரண்டு சினைவிரால் கண்டு குதிக்காலோ பந்து
படமே விரித்து தளிர்போலே

பிரமன்-தரு.

தளிரான பெண்டு அவல்ஷமீ திருந்து மதன்பாண மைந்தும்
விடுத்தாலே நன்று கலிதீரும்

சிவன்-தரு.

இருகுஜம்பற்றி இடையருகில் வந்து அவள்சுக மகற்றி
இதழில்மருந்து முத்தி தருவாளா

விஷ்ணு-தரு.

காரணத்தை கண்டு நாரணனார் தொண்டு பாடலையே விண்டு
கூடிடவே இன்று வருவாளோ

சிவன்-வேறுதரு-

ஆரம்மராதாயே எனக்கன்பாய்
அன்னமளிப் பாயே
ஆசைமிஞ்சியே நேசமாகவே
கூசிடாமலே குவலயம்தனில் ஆரம்

விஷ்ணு-தரு.

பாரம்மாயானும் பசியினால்வாடி
பாதவித்தோடி வந்தேன்
பாரினுனைப்போல யாவரும்பத்தினி
நேரதாய்வர சீரதாய்காண்கிலேன் பாரம்

பிரமன்-தரு.

காரம்மாஎன்னை பசியினால்வாடி
களைத்திங்கே ஓடிவாரேன்
காட்டுதேபசி வாட்டுதெங்களை
நாட்டமாகவே நங்கையேபாரும் காரம்

அனுசூயைகவி.

தையலென்சேடிகேளாய் தனித்திடும்மனையைநாடி
வையகத்துள்ளோர்மெச்சும் வகையுள்ள ஆண்டியைப்போல்
பையவேவந்தசேதி பாங்குடன்இன்னதென்று
மெய்யவேகேட்டுநீயும் விபரத்தைஉரைசெய்வாயே.

வசனம்.

சேளும்சேடிகளா அதோ மூன்றுபேர் சங்கமரைப்போல் வந்திருக்கின்றார் அந்த சமாசாரத்தை தெரிந்துவாரும் சேடிகளா.

அநுசூயை-கந்தார்த்தம்.

மாமுனிநாதர் வனம்சென்றபோது
நாமினிசெல்ல.

அநுசூயை-தரு.

ஞாயமல்லவேவோடி — அபாயம்வரும்சேடி
உபாயமாகவோடி — உத்தமிசிற்றிடைகற்புடையாளே ஞாய

அநுசூய-தரு.

சருணமூர்த்தன்திருவடிக்கி — சருவ்மையாசங்கமரே
தருணமெனையாண்டருளும் — தர்க்காத்தெனைரட்சியும்
ஆர்ணனைப்போல்மூவரும் — அடியாளிடமனைநாடி
திரமூடனேஇங்குவந்த — தேவர்பாதம்யான்தொழுதேன்
தொண்டரின்பதம்பணிந்தால் — சண்டன்பயமனுகாதையா
அண்டிவந்தேன்என்னைநீரும் — ஆதரித்திடகன்பாரும்
அருகுதும்பைமலர்கள்சாற்றி — ஐயரின்பதம்பணிந்தால்
பெருகஎன்னைமுத்திதந்து — பேதையையாள்வீர்கருணம் சரு

மூவர்கள்-கவி.

எங்களின்பதம்பணிந்த இயலுள்ளமாதேவாழி
இங்கனேமுடித்தயீசன் திருவருளாலேவாழி
மங்களமாகஇந்த மன்னுள்ளோர்புகழ்ந்துபோற்ற
தங்கமேவாழிநல்ல தரணியுந்தழைக்கத்தானே.

வசனம்.

மகாராசியாய் என்றென்றைக்கும் சுகசீவவதியாய்வாழக்கடவது எழுந்திருமம்மணி.

அனுசூயா-தரு.

ஐயமென்றுகேட்க்கும் பெரியோரே
தையல்வரக்கூடாது நேரே
என்னுசையுள்ளநாதனவர் பாசமுள்ள
கோடுகிழித்தாரே அரிவரே

சிவன்-தரு.

அரிசுவாயென்றுசொன்ன பெண்ணே
புன்பரிவானநாதனெங்கே கண்ணே
அட்டியில்லாக்கோடுதனை இட்டதர்க்காகநீயும்
சொல்லுமே அங்கேயில்லுமே

அனுசூய-தரு,

நில்லுமென்றுநீரும் சொன்னீர்மேலே
எந்தன்வல்லவருரைத்த மொழியாலே
சொல்லதைதடுத்துமவர் மெல்லியர்க்கழகல்லவே
நீதே உதவாதே

விஷ்ணு-தரு.

வாடுதென்னமைத்துனரே வாரீர்
வல்லவளழகைகொஞ்சம் பாரீர்
மாதேஉங்கள்கிருபையினாலே வாதைமிகமேலிடுதே
பாராய் கிருமைகூறராய்

அனுசூய-தரு.

வாராயென்றுரைத்தமொழி யாடாதே
இந்தக்கோதைமனைக்கிவரக் கூடாதே
நேராயுங்களுக்கன்னம் சீராயுனக்களிப்பேன்
நில்லுமே பதில்சொல்லுமே

பிரமன்-தரு.

சொல்லுமொழியைகேழ்க்கும் தந்தையே
இவளோசோரத்தனம்செய்யலாம் நிந்தையே
இல்லரம்தன்னிலே வல்லவருக்கன்னம்
மளிப்பாயே அளிப்பாயே

அனுசூய-ஒரடி தரு.

களிப்பாகவேநீங்கள் காரணரேவரக்கூடாது

சிவன்-தரு.

கூடாதென்றுசொன்ன கொம்பனையேதவமுனிவர்

அனுசூய-தரு.

முனிவனுனென்றதினால் கனியுடனேநீர்வாரும்

விஷ்ணு-தரு.

வருவீரென்றுசொன்னமாதே அரிவையரேசிஷியர்நாங்கள்

அனுசூய-தரு.

சிஷியனென்றதினால் சீருடனேநீரும்செல்வீர்

பிரமன்-தரு.

செல்லுவாயென்றுசொன்ன வல்லவரின்தோழர்நாங்கள்

அனுசூய-தரு.

தோழனுனென்றதினால் தோதகமாய்நீயும்செல்லும்

சிவன்-கவி.

வருகுவாயென்றுசொன்ன வனிதையேசொல்லக்கேளாய்
தருகுவாய்அன்னமிப்போ தரும்பசியாரத்தானே
சருகதுபோலவாடும் தன்மையுங்குணமுமுள்ள
அருமுனியோரேஅன்னம் அளிப்பேனென் அருந்துவீரே.

அனுசூய-தரு.

அன்னமதைஎடுத்து அனுசூயை — அம்மனுமேநடந்தாள்
பன்னகமணிந்தயீசனைநினைந்துமே — பைங்கிளியுநடந்தாள்
ந்தன்மனைதனிலேவந்திடும் — விந்தைப்பெரியோருக்கு
சந்தோஷமாகவேதந்திடவே அன்னம் — தையலரும்நடந்தாள்
பால்பழம்சர்க்கரையும் — வேணக்கனிபானகமுமெடுத்து
மேலவர்மாதோவெனநாடி — கூசிடமெல்லியரும்நடந்தாள்
கையில்சலமெடுத்து — முனிவரின்கரமதிலேவிடுத்து
பையவேஅன்னம்பகருவேனென்று — பட்சமுடன்நடந்தாள் அன்

அனுசூயைகவி.

தன்மைசேர்குணமுமுள்ள தவமுனியோரேகேளாய்
பெண்மணியானமாது பேதையாள்அமுதுகொண்டு
வண்மையாய்வந்தேன்யானும் வருமைசேர்பசிகள்நீங்க
உண்மையாய்அளிப்பேன்அன்னம் உண்மையாய்உண்ணுவாயே

வசனம்.

ஆனால் கேளுமையா சுவாமி தவமுனியோரே அடியாள் அன்னம் அளிக்கும்படிவந்தேன் உண்ணுமையா சுவாமி.

சிவன்-தரு.

உண்ணுவாய்என்ற — பெண்மணியான
உத்தமியே — கேளும்
உச்சிதமான — மெச்சும்விரதம்
உண்மை — எங்களுக்குண்டு

அனுசூய-தரு.

செப்பியமாமுனி — தேவரேநீரும்
செய்யும் — விரதத்திற்கு
ஒப்புமையாகவே — வேண்டும்பொருள்களை
உண்மையாய் — நீர்கேளும்

விஷ்ணு-தரு.

பத்தினியான அத்திரிமுனி
பைங்கிளியே கேளும்
இத்தரைமீதினில் ஆடையகற்றி
இன்பமுடன் வாரும்

அநுசூய-தரு.

ஆடையகற்றி அரிவையாள்வர
அநியாய மாகுமா
சாடையதாக சாற்றிடவேண்டாம்
தன்மைப் பெரியோரே

பிரமன்-தரு.

பெரியவரென்ற அரிவையேகேளும்
பேதையர் எங்கள்
அரியவேநாங்கள் அப்படிசொன்னோம்
அதைபோலவே வருவீர்

அநுசூய-வேறுதரு

வருகிறேன்முனியே அரிவையாளினியே
மர்மமதையரிய பெருமைசேர்நாதன்
பதமதைபோற்றி பேதையரும்நடந்தாள்
காரணனேஅரிகாரணனே பரிபூரணநித்தியனே
தாரணிதன்னிலே கோரியவிரதம்
தன்னையறிந்து வாறேன்
நாதனார்சென்ற சூதையறிந்து
வாதுகள்செய்ய வந்தனரே
மாதவள்கற்பை மீதில்லாமலே
ஆதரவாய்காக்க அடிபணிந்திட்டேன்
சாதுதவயோகி சார்ந்திடவேஅன்னம்
தையலரும் நடந்தாள்
தோதுடனேசென்று ஆடையகற்றியே
சுத்தசயந்தன்னிய முனார்ந்தவர்க்கு
கூந்தலவிழ்த்து குழல்சோரவிடுத்து
கோதையாள் விமானங்களை
சார்ந்தமுடனே முனியோரைப்பார்த்து
தையல்விரதம் தன்னையகற்றி வரு

சிவன்-தரு.

மதியோரதியோ இவள்ரூபம்
மங்கையர்கண்டிடவே மோகம்-மதி
ததிபுரிந்திவளை கெதியெனகொண்டாள்
பதிபுகழ்மேலாம் பதவியும்கிடைக்கும்

அனுசூய-தரு,

பாரடிதாதி பகர்ந்திடஅன்னம்
பத்தியாய் யான்வரவும்
கூரடிஇவரோ அங்கசன்போல
குழந்தை வடிவமானார்

அனுசூயை-கந்தார்த்தம்.

கோரியவிரதமெனஎமாற்றி கொடும்பாதகர்மனதினால்
சாரியாய்என்பக்கல் நிர்வாணமாகி

அனுசூய-தரு.

தையல்நான்வந்திடவும் நிர்வாணமாய்
தவமுனி தயங்கிடயும்
ஐயமில்லாமலே அரனவர்துணைஎன
மைவிழிதிரேகத்தை மயிரால்மறைத்துமே தைய

விஷ்ணு-தரு.

மைத்துனரே நீர்பாராதே
மங்கையுனக் காகாதே
பத்தியாய் மையலானேன்
பைங்கிளி இவளுன்தங்கை

அனுசூய-கந்தார்த்தம்.

மங்கையேபாரும் மாமுனிவெவ்வொருவராக
தங்காமலவரவர் வாதுசெய்து

த ரு.

58987

தாவியேவாரார் தையலைச்சேர
மேவியேவாரார் தாவியேமன்மதா
தோகையும்வாடியே பாவியர்தங்களோ
பதம்பெற உய்யவே தாவி

பிரமன்-தரு.

தந்தையேமோகம் கொள்ளாதே
தையலுன் மருமகள் விள்ளாதே
சந்திரசடாதரன் மகளாச்சே
சார்ங்கிடநாயகி இவளாச்சே

அனுசூய-கந்தார்த்தம்.

என் ஆசைக்குகந்த நாதனில்லாதவேளை
இப்பாதகர்காமத் தீயினல்நொந்து

தரு.

பாசமும்கொண்ட பாதகர் தங்களை
பதம்பெறவே சாபம்
பன்பாகநான் தருவேன் பாரடி தாதி
பன்பாநான் தருவேன் பாரடி பாச

சிவன்-சீசபத்தியம்-

என்செய்வேன் மங்கையே இவ்வனம்தன்னிலே
ஏங்கவும்வைப்பது தர்மமா

விஷ்ணு-சீசபத்தியம்.

பண்ணடிஉன்வாயால் பதம்பெறசேரலாம்
பாதத்திலாயிரம் கோடிசரணம்

பிரமன்-சீசபத்தியம்.

என்னடிமௌனமாய் இருப்பதுனக்கழகல்ல
ஏந்திழையாளே என்முகத்தைபாராய்

அனுசூய-சீசபத்தியம்.

கன்னிஎந்தனைக்கண்டு காமவாதைமேலிடும்
காரணமென்னமோ அறிகிலேனே

சிவன்-ஓரடிதரு.

முத்திதரும்சிவனருகும் முந்திசேரும்

விஷ்ணு-தரு.

பத்திதரும்விஷ்ணு பண்பாய்கேளும்

பிரமன்-தரு.

சத்தியலோகபிரமனன் சதிராய்கூடும்

சிவன்-தரு.

வெத்தியுடன்வந்தேனன் பாரும்பாரும்

சிவன்-கவி.

மங்கைஎன்காமத்தால் மதியதுசோர்ந்துஉள்ளம்
பொங்கமாய்வாடுதையோ புவியுள்ளகுயிலைப்போல
தங்காமல்மொழியைப்பேசும் தாராளமானமாதே
இங்கனம்என்னைச்சேர்ந்து இயல்புடன்கூடிடாயே.

வசனம்.

மன்மதபாணத்தினால் மயங்கி தவிக்கின்றேன் என்னைக் கூடி சுகித்திடவருவாய் அனுசூயயே.

அனுசூய-தரு.

கூடிடவுமுன் மனையாட்டியோ
கூசாமலேநீயும் செல்லுவாய்

சிவன்-தரு.

செல்லுவாய்என்றென்னை சொல்லுவதழகல்ல
சேரத்தருணமடி கண்மணி

அனுசூய-தரு.

கண்மணிஎன்றென்னை விண்ணனம்பேசுராய்
கர்த்தரென்பது உனக்கழகல்ல

சிவன்-தரு.

அழகல்லவென்றிடும் அன்னநடையாளேகேள்
அன்பாய்மன்மதன் செய்யும்வாதையால்

அனுசூய-தரு.

வாதைகளாகினால் உன்மனைக்கேகுவாய்
வஞ்சியுன்மனைவியை கூடுவாய்

சிவன்-தரு.

கூடுவாய்என்றநீ குலதெய்வமல்லவே
கும்பிட்டேன்எந்தனை காத்திடும்

அனுசூய-தரு.

காத்திடஉந்தனை நான்தெய்வமுமில்லையே
காரணப்பொருளேநீ நில்லுமே

சிவன்-தரு.

நில்லுமென்றுசொன்னால் அல்லல்செய்மன்மதன்
தொல்லையைநீக்கிடுவாய் பெண்மணி

அநுசூய-ஓரடி தரு.

பெண்மணியென்றுநீ பிணத்தாதே

சிவன்-தரு.

கண்மணியேயென்னை கூடுவாயே

அநுசூய-தரு.

கூடிடவும்நாடிடவும் தேடிடவும்தாசியோ

சிவன்-தரு.

கொம்பனையே கெஞ்சாதே

அநுசூய-தரு.

வம்புகள்செய்துநீ கெஞ்சாதே

சிவன்-தரு.

பஞ்சபாணனால் வாடுகிறேன்

அநுசூய-தரு.

பாதகமே நீதுகளேன்

சிவன்-கந்தார்த்தம்.

செல்லுவாயென்றுசொன்ன சேயிழையாளேகேளாய்
தொல்செய்மகனைநீக்கி சுகித்திடவொண்ணாதடி
பல்லுலகுதன்னிலேகாக்ஷி பகர்ந்திடும்சிவனும்நான்தான்
இல்லரம்தன்னில் பொக்கி.

சிவன்-தரு.

இசைத்தவரேவருவாய் அநுசூயயே-எந்தனைக்கூடி
இசைத்தவருவாய் அநுசூயயே
இசைத்திடஎந்தனை இன்பமாய்கூடியே
அசைந்திடும்பாதத்தில் அன்னையேவிழுகிறேன்

அநுசூய-கந்தார்த்தம்.

பாதத்தில்வீழ்வேனென்ற பரமரேஅடுக்குமோதான்
நாதத்தின்சுழியறிந்து நானிலமெங்குங்காக்கும்
வேதத்தின்பொருளறிந்த விமலனேதன்மார்க்கம்செய்
---த்திற்க்கப்பாலே செல்லும்,

அனுசூய-தரு.

காரணரேசாபம்பெருவீர் பூரணரேஇங்குவருவீர்
காரணனும்தேடிக்காணாத உந்தனை
தாரணியில்சிசுவாக சபித்திட்டேன் கார

விஷ்ணு-கவி.

பாசமதாகச்சென்ற பரமனும்வரவுங்காணேன்
ஆசையும்அதிகமாகி ஐம்புலன்ஒடுங்கிநெஞ்சம்
நேசமும்கொள்ளுதைபோ நீஇங்கேசற்றேநில்லும்
வாசமுமணிந்தமாதை வகையுடன்பார்த்துவாரேன்

வசனம்.

பரமசிவனானவர் போனவரைக்காணோம் நீ இவ்விடம் சற்று நேரம் இரும் நான்போய்வருகிறேன் பிர்மனே.

விஷ்ணு-தரு.

அம்மாஉனக்குதர்மமா அனுசூய
அம்மாஉனக்கு தர்மமா
இம்மானிலம்தன்னில் அம்மணியுனைப்போல
பெண்மணிஎன்னைச்சேருவாய் காமமிஞ்சுதே-பெண் அம்

அனுசூய-தரு.

சேருவாய்என்றுசொன்ன பாதகனேடோட்டா
சேருவாய்என்றுசொன்ன பாதகனே
பாரினுனைப்போல பழிகாரனைக்கண்டதில்லை
மீறிஎன்மனைதனில் நில்லாதேபடுபாவி மீறி

விஷ்ணு-தரு.

நில்லாதேஎன்றென்னை சொல்லவுந்தகாது
கல்லோஉன்மனம்கரையாதோ காமமிஞ்சுதே கல்

அனுசூய-தரு.

காமம்தலைக்கேரியே கத்துகிறையேமீரி
நேமத்துடனேசொல்லுவாய் நீஎந்தனைவிட்டு நேம

விஷ்ணு-தரு.

விட்டுச்செல்வேனோமாதே கட்டியணைந்திடத்தோதே
வட்டஸ்தனங்கள்மீறிக் கூவுதேஎந்தனைக்கண்டு வட்

அனுசூய-தரு.

கூவிடுவாயுர்தன் தேவியவளைமேவி
ஆவியைப்போலணைந்துக் கூடுவாய்படுபாவி ஆவி

விஷ்ணு-தரு.

அணைந்திடஉந்தனைக்கூடி அஞ்சுகமே
அஞ்சுகமே வந்தேண்டிநான்
துணிந்துமன்மதன் செய்யும்வாதையால்
துணிந்துமன்மதன் செய்யும்வாதையால்

அனுசூய-தரு.

உன்மகன்பஞ்சபாணம் தன்னையடக்கிடவும்
உன்னாலேயாகாதோ படுபாவி உன்

விஷ்ணு-கந்தார்த்தம்.

வடிவானபெண்ணே அடிமோகனுங்கி
படிமிசைதன்னிலே,

விஷ்ணு-தரு.

பாவையேஎன்னைக்கூடிடாய் அனுசூய-பாவை
பாவையேமோகத்தினுல் உன்பாதத்தில்பணிந்தேனே
தாவிஎந்தனைநீரும் தன்மையுடன்சேருவாய் பாவை

அனுசூய-கந்தார்த்தம்.

முடிவிலாசிவனுர் படிதனில்சிசுவாய்
அடவுடனிருக்க அதைபோல

அனுசூய-தரு.

படவும்உனக்குவிதியோ படுபாவிதோஷி-படவு
திடமுடனேஉனக்கு சிசுவாகசாபம்தந்தேன்
தடமானமூலையில் தங்கிஇருந்திடுவாய் படவு

பிரமன்-கவி.

சென்றவர்வரவும்காணேன் சேயிழைஅவளைக்கூட
இன்றுநான்வாகையாலே யேங்குரேன்வழியைப்பார்த்து
நன்றெனதேரிகெஞ்சம் நங்கையாள்தன்னைச்சேர
வன்னுமாஞ்சோலைமேவும் வனிதையைதேடிவாரேன்.

வசனம்.

என் தங்கையனைவர் போனவரை இன்னும்காணேமே சோலைக்குயிலையொத்த அனுசூயயை தேடிப்பார்த்து யேதென்றுச் சொல்லுவது.

பிரம்மன்-தரு.

கொஞ்சுங்கிளியன்னமே அனுசூய
சூருவாய் சொர்ன்னமே
பஞ்சபாணனாலே வாடுதேதிரேகமும்
மிஞ்சிளனைச் சேருவாய் கொ

அனுசூய-தரு.

சேருவாய்என்று சொன்னமூடா
உந்தனுக்குகோமு மில்லையோடா
மீரிச்சதுர்முகனென்ற பேர்தனில்
காரியுமிழ்ந்தே னடா சேரு

பிரமன்-தரு.

காரியுமிழ்ந்தேனென்ற அனுசூயா
கன்னியெனைச் சேருவாய்
பாரிலுனைப்போல வேறொருபெண்களை
பார்த்ததில்லை கண்ணே காரி

அனுசூய-தரு.

கண்ணேஎன்று சொன்னாயுன்
மகள்தன்னைப் புணர்ந்தவனே
நன்னயமாகவே சின்னப்புத்தியினால்
என்னைச்சேர வந்தாய் கண்

பிரமன்-வேறுதரு.

சேரவந்தேண்டியுன்னைக் கோரவந்தேண்டி நான்
கூரடிப்பதிலுத்தாரம் கோமளாங்கி

அனுசூய-தரு.

உத்தாரம்சொல்லவும் பத்தினிநானல்லவே
சற்றேறவிலகிப்போ சண்டாளப்பாவி

பிரமன் தரு.

சண்டாளனென்றென்னை பெண்டுநீபேசவும்
மண்டலத்திலெர்க்குமோடி மங்கையாளே

அனுசூய-தரு.

மங்கையாளென்றென்னை பொங்கம்பேசவும்
சங்கையுனக்கில்லையே சதிகாரனாயே.

பிரமன்-சிந்து.

பத்தினியேஎந்தனை இத்தருணம்சேர்ந்தணைய
உத்தமியேதயவு செய்யடி
உன்சித்தமிரங்க மனம்வையடி
சு-தேவியரே பாவையரே
ஆவலாய்சேர்த் தணையவா

அனுசூயசிந்து-தரு.

அணைந்திடுமென்றுசொன்ன குணங்கெட்டநாயே
ஆகாசிசுவாக தொல்லையே
பாகார்மொழி சாயம்வல்லையே
சு-அட்டியில்லாமலே பொட்டெனதந்தேன்
கஷ்டமில்லாமலே கண்டேசெல்லுவாய் அணை

பொதுவசனம்.

இவ்விதமாய் மும்மூர்த்திகளும் குழந்தையாக அந்தசமயத்தில் நாரதர் அத்திரிமுனிக்கு இந்தசமாச்சாரம் தெரிவிக்கும்படி செல்லுகிறவிதங்காண்க.

நாரதர்-தரு.

நங்கையர்சாபம்பெற்ற மூவரும்சிசுவதாக
நாரதனும்கண்டறிந்தானே தந்தானத்தான
அத்திரிமுனியிடத்தில் செல்லுவேன்கலகங்களை
அதிவிதமாய் அங்கேபுல்லுவேன்
செய்தகலகம்கலமல்லவே இதற்குமேலே
செய்திடும்கலகம் வேணதண்டுமே
பாரும்பதம்பணிந்து நின்றேனே
முனியைக் கண்டு
பதம்பெறவழியுரையும் மென்றேனே தந்தா நங்கை

அத்திரிமுனி-கவி

திருலோகமெங்கும்சுற்றி திரிந்திடும்முனியேகேளாய்
பரிவுள்ளஉலகிலென்றும் நீபதம்பெறஎன்றும்வாழி
தெரியானவனத்தைநாடி நீஇங்கேவந்ததென்ன
விரிவாகஎந்தனுக்கு விவரத்தைஉரைசெய்வாயே.

வசனம்.

கேளும் நாரதரே நீ இந்தவனத்தைநாடி நம்மிடம் வந்தசேதி தெரியச்சொல்லும் நாரதரே.

நாரதர்-தரு,

என்னமாயுரைப்பேனையனே அங்குநடக்கும்
பன்னியசேதியை ஐய்யனே
அன்னவர்சிவனுடன் அண்டமுண்டவனும்கூடி
துன்னியயுனதுபத்தினி தோகையாள்கர்ப்பழிக்க என்

அத்திரி-தரு.

அழிக்க அவனாலாகுமோ அன்னவன்சிவனுமாலுமேகூடி
அழிக்க அவனா லாகுமோ
பழிக்கவேயுலகத்தி லொழிக்குரேன்மும்மூர்த்தியை
செழிக்க அவனுடைய வீரவல்லமைதன்னை அழி

நாரதர்-தரு.

கேவலமாகமதித்தார் மும்மூர்த்திகள்
கேவலமாக மதித்தார்
கேவலமாகஉன்னை கிஞ்சித்துமதியாமல்
ஆனியையொத்தபத்தினி அரிவையாள்கர்ப்பழிக்க

அத்திரி-தரு.

அரிகுவேம்வாரும்நாரதா அவர்திறத்தை
சரியாகநாமும் நேரதாய்

பரிவானஉலகத்தில் பழிக்குபழிவாங்குரேன்
உரிமையாய்அவர்களின் உண்மையைதெரிகுரேன்

அத்திரி-கவி.

நாரதருரைத்தபோது நடுங்கியேகிலேசமுற்று
சிரியேமாளிவந்து சேயிழைபாளேக்கூவி
நாரியேஇவ்விடத்தில் நடந்ததோர்சேதிதன்னை
வீரமாய்அரியத்தானே விவரத்தையுரைசெய்வாயே.

வசனம்.

கேளும் பெண்ணே நான் தபத்திர்க்கு சென்றபிறகு இங்கே நடந்த சமாசாரம் தெரியச்சொல்லு அனுசூய.

அனுசூய-தரு.

படுபாவிமுவர்களால் பட்டபாடென்னசொல்வேன்
பாதகம்தனையுரைக்க பிராணநாதா
அடவிதனில்வந்து அடாததுன்பங்கள்செய்தார்
அரும்பிழைக்காளாகினேம் பிராணநாதா

அத்திரி-தரு.

அரும்பிழைகள்செய்த ஆங்காரம்கொண்டஅவரை
தெரியவேஎன்னிடம்காட்டுவாய் பெண்ணேகண்ணே தெ

அனுசூய-தரு.

காட்டுவாய்என்றுசொன்ன காரணரேநாதா
கன்னிகர்ப்பையழிக்க படுபாவிமூவர்
மேட்டிமையாகவே வந்தவிவரத்தை
வினவிடவாய்போதாதே பிராணநாதா

அத்திரி-வேறுதரு.

வினவிடலாகாதென்ற மனமொத்தக்கன்னியே
வனிதையேபங்கமானவர் அந்தமூவரும் வனி

அனுசூய-கவி.

மதித்திடும்பிராணநாதா வனிதையாள்சொல்லக்கேளும்
துதித்திடும்தெய்வமென்று தோகையாள்வந்துநின்று
க்ஷிதித்தவர்க்கன்னமிட்டேன் காரிழைஎன்னைப்பார்த்து
பதித்திடமோகம்கொண்டார் பன்மையாய்என்னசொல்வேன்.

வசனம்.

கேளும்நாதா அந்தமூவர்களும் வந்து அன்னம்கேட்டார்நான் சாதமளிக்கும்படி வருக அவர் என்னைக்கண்டு மோகித்தார் பிராணநாதா.

அத்திரி-தரு.

என்னசெய்குவோமென்ற கண்மணி
பன்னகமணிந்தோன்கேள் விண்மணி
அன்னவளிடப்பாகம் அமர்ந்தவளங்கிருக்க
உன்னிதமானபத்தினியை உகந்துஅழிக்கவந்தான் என்

அநுசூய-தரு.

இடப்பாகம்பெற்றவ ளங்கிருக்க
இந்தமடக்கொடி இடம்வந்தசெருக்கை இட
அடக்கியுரைக்கப்போமோ திடத்துடன்வந்தசேதி
படக்காலம்வந்ததென்று பத்தினிசாபம்தந்தேன் இட

அத்திரி-தரு.

மங்கையேஇங்கனம் நீவாருமே
இவன்மாமத்தைகேட்டு நீதேருமே
தங்கும்பிள்ளையார்கோவில் தன்மாமியுடன்கூடி
பொங்கமாய்இருந்தவன் புதுமைதெரியுமடி

அநுசூய-தரு.

மாமியைகூடிட்ட மாதவன்
இவன்மங்கையர்கர்ப்பழிக்க யாதவன்
தாமதமில்லாமல் சரசங்கள்செய்ததை
பூமிதன்னிலேயானும் புகலவொண்ணுநாதா

அத்திரி-தரு.

சிருஷ்டிக்குந்தொழிலுள்ள பிரம்மனின்
சேதிதெரியுமடி கண்மணி
கஷ்டமில்லாமலே கன்னியைசிருஷ்டித்து
துஷ்டதனமாக துராகிர்தம்செய்தவன்

அநுசூய-தரு.

பாவிதுன்மார்க்கன்செய்த வாதையால்
இவர்களைபாதகனுக்கினேன் வேதையால்
ஆவிக்கிதுணையான அருமைஎன்நாதரே
தாவிமனைதனில் தங்கிஇருக்கிலா

நாரதர்-கவி.

ஆலத்தையுண்டநாதன் அவரிடபாகம்பெற்ற
வேலொத்தவிழியினாளே விமலியேசொலலக்கேளாய்
மாலுடன்மூவருக்கும் மாதேவிசாபம்தந்தாள்
பாலிநன்மொழியினளே பைங்கிளிதெரிந்துகொள்ளும்

வசனம்.

கேளுமம்மாள் தாயே உங்கள் நாதன் மும்மூர்த்திகளும் அனுசூயயிடம் சென்றார்களே அவர்கள் குழந்தையாக சாபம் பெற்று அங்கனம் கிடக்கிறாரம்மா.

பார்ப்பதி-கவி.

என்னதான்செய்வேனம்மா இவவிதிநாதருக்கு
அன்னவனெழுதிட்டானோ ஆவியும்சோருதமமா
கன்னலன்தன்னைவென்ற கார்வண்ணன்என்அண்ணனுக்கு
நன்னயசாபம்வந்தால் நங்கையானென்னசெய்வேன்.

வசனம்.

மூவர்களும் இவ்விதசாபம் பெற்றுவிடவும் நாங்கள் தவிக்கலாகுமோ பரமதேவே.

பார்ப்பதி-தரு.

பரனேஇந்த பாவையர்வாடவும்
பத்தினிசாபம் பலித்துதேஎன்செய்வேன்
  சு-பாரும்நாரத முனிவரே
  பங்கம்வந்திட நங்கைஎன்செய்வேன்

மங்கை-தரு.

அருமைஎந்தன்நாதருக்கு இந்தவிதி
ஆச்சோநான் யென்னசெய்வேனம்மணி
சு-அங்கம்பதரியே பங்கம்போகுதே
இங்கனம்துணை யாருமில்லையே

சரஸ்வதி-தரு.

என்உள்ளமும்வாடி சோருதேயென்செய்வேன்
உத்தமசேதியுரைப்பார் காணேனே
சு-ஊக்கம்கொண்டுமே ஏக்கமானேனே
என்னைகார்த்தருள்காரும் நாரதா

நாரதர்-தரு.

கேளுமேஅம்மா கேளுமே
கேளுமேயுனநாதன் ஆளுமென்றசொன்னபோது
நாளுமேசிசுவாகமீளா சாபங்கொடுத்தார் கேளு

பார்ப்பதி-தரு,

என்செய்வேன்முனியே என்செய்வேன்
என்செய்வேன்இவ்விதிக்கி ஈசன்சிசுவாகி
அன்னீதமாய்புவியில் அவதிப்படுகிறாம் என்

நாரதர்-தரு.

சொல்லுவேன்முறை சொல்லுவேன்
சொல்லுவேன் அவளிடத்தில் வல்லவிநீங்கள்மூவரும்
தொல்லையில்லாபத்தினி இல்லரத்தில்வேலைசெய்யும் சொ

மங்கை-தரு.

பாங்கிபோல்அவளிட பாங்கிபோல்
பாங்கிபோல்அவளிடத்தில் சோங்கிநாங்கள்வேலைசெய்ய
மாங்குயில்சோலைமேவும் மாமுனிசம்மதமா பாங்

நாரதர்-தரு.

சொல்ப்படிதாயே சொல்ப்படி
சொல்ப்படிசெய்யாவிட்டால் இப்பவும்வரவுமாட்டார்
கர்ப்பினிபத்தினியிட காரிழைசாபம்பொல்லாது

சரஸ்வதி-தரு.

போகுறோமுனியே போகுறோம்
போகுறோம்அவளிடத்தில் ஆகும்வேலைஅங்கேசெய்ய
பாங்குடனேநாங்கள்சென்று பண்பாய்வருகிறோம

நாரதர்-கவி.

அப்படிதானேசென்று அனுசூயமனையில்சிக்கி
மைப்படிகண்ணாள்வேலை மங்கைமூவருமேசெய்து
தப்பில்லாமனத்தாளான தையலாள்கண்டுமெச்ச
ஒப்புமைநாதன்தன்னை உண்மையாய்அழைத்துவாராய்.

வசனம்.

அப்படிநீங்கள் மூவரும் உங்கள் மமதைவிட்டு பூலோகத்தில் அனுசூயமனையிலுள்ள வேலைகளைசெய்து உங்கள்நாதனை மீட்டுவாரு மம்மணி.

பார்ப்பதி-தரு.

பாங்கிபோல்வேலைசெய்ய பங்கம்போகுதே
பாங்கியைப்போல்நாங்கள் பரிவுள்ளவாசலை
வாதுடன்சாணம்தெளிக்க வர்மமோஎன்செய்வேன்

மங்கை-தரு.

தாதிபோல்வேலைசெய்ய சம்மதியாமோ
தாதியைப்போல் தலைவாசல்படி
வாதுடன்சாணம்தெளிக்க வர்மமோஎன்னசெய்தேனோ

சரஸ்வதி-தரு.

சேடிபோலவேலைசெய்ய சேடிபோலே
மாளிகையிலுண்டான மணங்கள்தூசிமுதல்
வாடியேகைதுடைப்பத்தால் பெருக்கிட

கோமளவல்லி-கவி.

அம்மணிஎன்னகுற்றம் அரிவையாள்செய்திட்டேனோ
செம்மையாயிருக்கவேறே சேடியர்வேலைசெய்ய
சும்மாநானிருக்கொணாது தோதகமாகும்சொன்னேன்
கொம்மைசேர்முலையினாளே கூறுவாயரியத்தாயே.

வசனம்.

அம்மா நான் என்குற்றம் செய்தேன் என்னைவிட்டுவேருஊழியக்காரியை வைத்துக்கொண்டீர் அதைத் தெரியச்சொல்லு மம்மா.

அநுசூய-தரு.

கோமளவதிஎனும் கொற்றவல்செய்யும்
கொம்பனையே வாராய்
கொடுமைநான்செய்ததை கொம்பனையெனக்கு
குற்றமறக் கூறாய்

கோமளவல்லி-தரு.

கூறாய்என்றுசொன்ன குஞ்சரவதனியே
கோதையாள் யானிருக்க
பாராய்என்னைப்போல பாங்கியாளொருத்தி
பணிவிடைசெய்வது யேன் கூறா

அநுசூய-தரு.

பணிவிடைசெய்ய பாங்கியரைநான்
பன்புடன் அழைக்கவில்லை
துணிவுடன்செய்யும் கள்ளச்சிரிக்கியை
சுருக்கிலழைத்து வாடி

கோமளவல்லி-தரு.

அழைத்துவாடிஎன்ற அபரஞ்சியேநான்
அன்புடனே சென்று
பழித்திடஉலகில் பாவையரைநான்
பன்புடன்கொண்டு வாரேன்

மூவர்கள்-கவி.

ஆருநாளாகவேலை அரிவைநாம்செய்திட்டோம்
காருபார்செய்தஅந்த கன்னியிம்அழைக்கவில்லை
சீருடன்இன்னுமேனோடோ சென்றிடவாரமாச்சு
பாருள்ளோர்கண்டால் பன்புடன்சொல்லுவோமே.

பார்ப்பதி-தரு,

பத்தாவும்சென்றிட உத்தமியும்வரகெதியோ
பன்பாகஇவள்வாசல் சாணம்தெளித்திடவிதியோ

மங்கை-தரு

கொம்பனையேஎன்னை கொடுமைகள்செய்தேனே அரியேன்
கையால்கோலமிட கண்ணாளர்வருவாரோதெரியேன்

சரஸ்வதி-தரு.

கைதடப்பங்கொண்டு கன்னியாள்வாசலைபெருக்க
காரணன்செய்[illegible]ல் கன்னியாளருக்குசெருக்க

கோமளவல்லிகவி.

வருவா[illegible]ளாவென்றுசொல்லி வழிபார்த்துபோகும்கள்ளி
தெருவையாள்யானிருக்க செய்திடும்வேலையாதோ
மருமலர்சூடும்கன்னி மாதுபோல்மூவர்கூடி
பெருகவேபோகும்கள்ளி பிடித்தேனுன்கரங்கள்பற்றி.

வசனம்.

மகாலட்சுமியைப்போல் வடிவமுள்ளமாதே நான் செய்யப்பட்டவேலையை யாதுகாரணமாக செய்கின்றாய் தெரியச்சொல்லுமம்மணி.

கோமளவல்லி-தரு.

பாவிசக்காளத்தி பழிகாரிமூவரும்
தாவிஎன்வேலையை மேவிப்பற்றிடமுன்னே
ஆவிசைப்போக்குட அரைக்கணந்தன்னிலே
எவினுளெங்களம்மை கூவிதள்ளினேன்மூவர்தன்னை
சு-ஆசையாகவே கைவீசாதடிகள்ளி
மோசமதாகவே மொழிந்திடாதேசொல்லி

மங்கை-தரு.

கூவிடவந்த கோவங்கள்வைத்திடாதே
மேவியோர்தனுள்ளம மெல்லியேசேருதம்மா

கோமளவல்லி-தரு.

சோருதென்றமாதே தோகையரேயுங்கள்
பேரென்னஊரென்ன சொல்லுவாவோடாதேகில்லு
காருபாருசெய்து கன்னியரிவார்களோ
கூரவேசெட்டிநீதள்ளும் ஆரிவளென்றேநீவிள்ளும்
சு-அச்சமில்லாமலே இச்சமையத்திலே
மெச்சும்படிக்கு உக்கிதமாக சோரு

பார்பதி-தரு.

விள்ளுவேன்கேளுமம்மா கள்ளமில்லாசசிவன்
வள்ளலின்பத்தினி நானுகுமே
விள்ளவும்சேதிநீ கொள்ளுமே

கோமளவல்லி-தரு.

பத்தினியாளென்ற உத்தமியேகேளும்
பாவியேஉன்பேரென்ன சொல்லு
மேவியேஇவளாரே விள்ளும்
நங்கைஇடம்கொண்டு நாமே
இங்கிதமாய் சேருவோமே
சு-நாயகியே உபாயமாய்வாருங்கோனா
அபாயமில்லாமல் அம்மையிடமசெல்ல

சரஸ்வதி-தரு.

சேருங்கோளென்றமாதே சேயிழையே
எங்கள்நாதனிருக்குமிடம் இதுதானே

கோமளவல்லி-கவி.

அடவுடன்தாயே அம்மணிகேளும்
திடமுடன்மூவரை தெரிந்துநீகொள்ளும்

அனுசூய-கவி.

தையலேகேளுமம்மா தனித்திங்கேமூவர்கூடி
மெய்யதாய்வேலைசெய்ய விருப்பநீகொண்டதென்ன
உய்யவேவந்தவாரு உத்தமிபேருர்தன்னை
நையவேஎந்தனுக்கு நன்றாகஉரைசெய்வாயே.

வசனம்.

அம்மணி உங்களை தேவமாதரைப்போலிருக்கின்றது தாங்கள் நான்சேவல்லமற்ற அடியாளிடவாசல் மூத்தம்தெளிக்கும்படி வந்த காரியமியாது தெரிவிப்பாயம்மணி

பார்பதி-சம்பை.

சொல்லுகிறேன் கேளுமம்மா
சுந்தரியேயெந்தன் நாதனை
உந்தனிடம் வந்தசேதி
உத்தமியே தெரியவந்தோம்

அனுசூய-சம்பை.

தெரியவந்தமென்றுரைத்த பரியுடையநாயகமே
அரியவுங்கள்பேரதனை சரியுடனுரைக்கவேணும்

மங்கை-சம்பை.

உரைக்கவேண்டு மென்றுசொன்ன
உத்தமியே ஒத்துக்கொள்வேன்
அருகிருந்த லட்சுமியாள்
அதனைநீ யரிந்துகொள்ளும்

அனுசூய-சம்பை.

அரிந்துசொன்வாய் என்றுசொன்ன
அ[illegible]வரே சொல்வேன்கேளும்
பரிந்துஉங்கள் நாதனிட
பழக்கமும் இதுதானு

சல்திவதி-சம்பை.

பழக்கமந்து இல்லையம்மா
படுபாவி நாரதனும்
வழக்காடி மூவர்களை
வம்புசெய்து கொண்டுவந்தான்

அனுசூய-சம்பை.

கொண்டுவந்தா னென்றுரைத்த
கொம்பனையே மூவர்களும்
பெண்டுயெந்தன் கர்ப்பழிக்க
பேசவந்தாய் மோசக்காரி

அனுசூய-சம்பை.

கங்கையைகமர்தவண்டி திங்களணிந்தவனும்
[illegible]கம்எந்தனைசெய்ய பாருக்கடுக்குமோடி.

பார்பதிசம்பை.

அடுக்காதவேலைசெய்த தடுச்குள்ளபாவிகளே
மடக்கொடியேவைதுநீயும் மனைக்கிஅநுப்பனை

அநுசூய-தரு.

அநுப்பனென்னதவென்ற அருவுகெட்டசண்டாளியே
யீனமானமிலலாமல் இடைச்சியைபுணர்ந்தவண்டி

மங்கை-தரு.

இடைச்சியைப்புணர்ந்தானென்ற மடத்தனமுடையவனை
அடக்கியோட்டவொண்ணுதா அரும்பாவியென்னசெய்வார்

அநுசூய-தரு.

என்னசெய்குவோமென்ற அன்னமேநீஇங்குவாராய்
தன்மகள்தனைப்புணர்ந்த சாதிகெட்டயீனனடி

சரஸ்வதிதரு.

ஈனனென்றுமேசொன்ன எந்திழைபாரே கேளாய்
மானமில்லாதவனை மனைக்கிஅநுப்பனுதா

நாரதர்-கவி.

என்னமாஇரைச்சலிட்டு எல்லோருமொன்றாய்கூடி
பன்னிரியேகலகம்செய்ய பாங்குடன்வந்திட்டாரோ
நன்னயமாகஇங்கே நடந்ததோர்கலகமென்ன
உன்னிதமாகவேதா உரைசெய்வாய்உரைசெய்வாயே.

வசனம்.

என்னம்மா இவ்விடம் நீங்களொன்றாகக்கூடி சண்டையிட்டுக் கொள்ளவேண்டியக் காரியம்யாது நன்றாகத் தெரியச்சொல்லும் அம்மணி.

அநுசூய-தரு.

நாரதமாமுனியேவாரும் இவர்கள்
நடத்தைதனைகொஞ்சம் கேளும்
நேரேஇவர்கள்நாதன் நிந்தனைசெய்தவரை
வீரமுடனோராம் விட்டுவிடப்பே

நாரதர்-தரு.

விட்டுவிட்டாலே நன்றுதானம்மா
மூவர்களாலே இங்குபாரம்மா
கெட்டுதாலமெல்லாம் விட்டுதிருளடைந்து
பொட்டெனவேமூவர்களை அட்டியில்லாமலே விட்

மூவர்-தரு.

முந்தாணிபிச்சைதனை தாருமே
இந்தமூவர்முகத்தை கண்ணாற்பாருமே
சந்திரன்தனையளித்த வித்தையுள்ளயாதாவே
மைந்தனுக்கு தர்மமம்மா
மங்கிலியபிச்சை தாரும் முந்



நாரதர்-தரு.

மாதேவரெல்லாம் வாடுறாருலகில்
ர்மமருந்துன்னை தேடுறார்
கூடாதுஎன்றுலே குவல்யம்கிடையாது
டவேண்டாமம்மா வஞ்சியரேவிட்டுவிடு

அனுசூயகற்

அனுசூ

விட்டுநான்விடுவேனையா விமல
கெட்டிட உலகம்தன்னில் கெடுத்
அட்டியில்லாதநாதன் அவரிடமெ
பொட்டெனசாபம்நீக்கி பூவையும்

வசனம்.

சேனும் நாரதமுனியே தங்களுத்திரவி
விட்டேனையா சுவாமி நாரதரே.

ஈஸ்வரி அகவல்.

சாபமும்நீங்க தன்மையாய்மூவரும்
ஏகியேவருக இடபாகம்பெற்றாள்

மங்கை அகவல்.

மாயர்தன்னை மங்கையாளமைந்து
நேயமாய்வைகுந்தம் லட்சுமிசேர்ந்தாள்

சரஸ்வதி அகவல்.

காருநீஎன்று கஞ்சனு[illegible]ாரி
நேருசன்சத்தியலோகமே சேர்ந்தாள்

வாழி.

சீர்பெருங்கணேசர்வாழி சிறந்தநல்தேவர்வாழி
பார்புகழ்வேதம்நான்கும் பகர்ந்தஇவ்வுலகில்வாழி
பேர்பெரும்இன்னாடகம் பிரியமாய்படிப்போர்வாழி
கார்பெரும்சின்னக்காரை கந்தனும்வாழித்தானே.

அனுசூயகற்புநாடகம்.

முற்றிற்று

…ர் துணை.

…ளம்பரம்.

	1	0	இலக்ஷுமணதேவிநாடகம்	0	5
	3	0	சீமந்தினிகலியாணநாடகம்	0	5
	3	0	கருடகெர்வபங்கநாடகம்	0	5
	3	0	மணிமாலன் சண்டைநாடகம்	0	5
…ம்			செங்கையம்மன்நாடகம்	0	5
	2	8	சயிந்தவநாடகம்	0	5
	1	0	பதினெட்டாம்போர்நாடகம்	0	5
	2	8	சத்தியபாமா கெர்வபங்க நாடகம்	0	6
			பழியஞ்சினநாடகம்	0	5
	1	8	கௌரிமோக்ஷநாடகம்	0	5
…யம்	1	0	சராசந்தநாடகம்	0	8
	0	12	காளிங்கநிர்த்தனநாடகம்	0	6
…ந்தாமணி	1	0	சனிவாரவிரதநாடகம்	0	8
…கைவல்லியம்			மன்மதநாடகம்	0	8
	3	0	கிருஷ்ணன்ஜ…க்ரீடைநாடகம்	0	8
…மணி	2	0			
…லை	0	6	**இனி அச்சிட்டுவரும்**		
…னை	0	6	**நாடகங்கள்.**		
…த்திரப்பா	0	6	அநுசூயை கற்புநாடகம்	0	5
…சந்த்ரவதனி	0	6	திரிபுரசம்மாரநாடகம்		
…ரமோகனஜர்ணஇராம	0	8	பௌவுத்தமதநாடகம்		
…பாளமாக்திரீக அரிச்சுவடி	0	4	அகலிகைசாபவிமோசனநாடகம்		
…ததாஸ்கீர்த்தனை	0	3	பஞ்சமூர்த்தி வைகுந்தநாடகம்		
… இரண்டாம்பாகம்	0	8	காந்தரூபன் சரித்திரநாடகம்		
… மூன்றாம்பாகம்	0	8	இராவணசம்மாரநாடகம்		
…கிரிநாதர்சரித்திரம	0	6	ஸ்ரீராமர் வைகுந்தநாடகம்		
…காபாகவதகாவடிச்சிந்து	0	3	மங்களவல்லிநாடகம்		
…நாடகம்	1	8	சுயோதனன் முதல்நாள் சண்டைநாடகம்		
…பநாடகம்	1	0	சடாயுபக்ஷிநாடகம்		
…கம்	0	8	காசுகேதுநாடகம்		

…மற்படி புத்தகங்களும் இன்னும் இதரமான நாடகம், விலா… …த, அம்மானை, வைத்தியம், சோதிடம், புராணம், காவியம், …ரைப் புத்தகங்களும், தெலுங்குபுத்தகங்களும், கிரந்தபுத்த… அடியிற்கண்ட விலாசத்தாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு,

ம. கி. முருகேசமுதலியார்.

புஸ்தகவியாபாரம் கூடலூர், ஓ.டி.